# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**அக்டோபர் 2008 ஜீவியம் 14 மலர் 6**

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் | 2 |
| இந்தியாவின் ஆன்மீகச் சூழல் | 25 |
| அன்பர் கடிதம் | 28 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 29 |
| இம்மாதச் செய்தி | 32 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 33 |
| தலைமை | 34 |
| சாவித்ரி | 44 |
| முன்னேற்றம் தரக்கூடிய சாதனை | 46 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 49 |
| தேடி வந்த தெய்வம் | 57 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

அறிவிற்குப் புரிந்தாலும் உணர்விற்குத் தேவைப்படாதது உள்ளே நிற்காது.

வாழ்வு கட்டுப்படுவது அதிர்ஷ்டம்.

ஆத்மா கட்டுப்படுவது தவம்.

வாழ்வில் ஆத்மா கட்டுப்படுவது பிரம்ம ஜனனம்.

கையால் வேலை செய்வதும், அறிவால் வேலை செய்வதும் கூடாதுஎன்று உணர்வதே மனிதனின் உண்மையான வேலை.

# லைப் டிவைன்

கர்மயோகி

## 17. தெய்வீக ஆன்மா

தெய்வம், கடவுள், இறைவன்ஆகிய சொற்கள் நமக்கு ஒன்றையே குறிக்கும். நினைவில் சிவன், விஷ்ணு தோன்றும். தத்துவரீதியாக பிரம்மம் முடிவானது. சச்சிதானந்தம் அதைச் சேர்ந்தது. நாம் அதைச் சச்சிதானந்த பிரம்மம் என்கிறோம். தெய்வம் என்றால் ஒரு பெரிய சக்திஎனப் புரியுமே தவிர, எதை நாம் தெய்வம் எனக் கூறுகிறோம்என நாம் விவரமாக அறிவதில்லை. அதைப் பற்றிச் சிந்திப்பதுமில்லை. சத்புருஷன்என்ற அத்தியாயத்திலிருந்து கடவுள் என்ற கருத்துக்கு தத்துவரீதியாக ஒரு தெளிவான உருவம் கொடுத்து, அது எப்படி உலகைச் சிருஷ்டித்ததுஎன பல அத்தியாயங்-களில் கூறினோம்.

தவத்தை மேற்கொண்ட ரிஷிகள் தெய்வத்தையடையவில்லை. தெய்வத்தைக் கடந்த பிரம்மத்தையடைந்தனர். அதைச் சாதிக்க வாழ்வை விட்டு வெளியேறினர். அந்த பிரம்மத்தை ஆதியும், அந்தமும் இல்லாத பிரம்மம் - அக்ஷர பிரம்மம் - எனக் கூறினர். க்ஷரம் என்றால் அழிவு. அக்ஷரம்எனில் அழிவில்லாதது. அது அழிவில்லாமல் இருக்கக் காரணம் அசைவில்லாமலிருப்பதேயாகும். அசைவு வளர்ச்சி தரும், அழிவையும் தரும். ஆதி, அந்தம் - முடிவு, அசைவு, வளர்ச்சி, அழிவு - இல்லாத பிரம்மம் அக்ஷர பிரம்மம். பரமாத்மாஎனவும் கூறலாம். மனிதனில் உள்ளது ஜீவன். ஜீவனுக்கு உயிரளிப்பது ஜீவாத்மா. ஜீவாத்மா எனில் ஜீவனுக்கு மையமான ஆத்மா. ஆன்மா எனவும் கூறுவர். மனிதன் மனத்தை விட்டகன்று ஜீவாத்மாவை அடைவது



மோட்சம். அவன் ஜீவன் முக்தன்எனப்படுவான். ஜீவாத்மாவை அடைந்த மனிதன் தவத்தால் மேலும் உயர்ந்து பரமாத்மாவையடைவது மோட்சத்தில் உயர்ந்த கட்டம். இவை தெய்வங்களைக் கடந்த நிலை. ரிஷிகள் தெய்வங்களைவிட சக்தி வாய்ந்தவர்கள்.

ஸ்ரீ அரவிந்தம் மோட்சத்தை நாடவில்லை; திருவுருமாற்றத்தை நாடுகிறது. ஜடமான உடல் சத்புருஷனாகி, சைத்தியபுருஷன் ஆனந்தமாகி, இருண்ட வாழ்வு சித்-சக்தியாகி, மனம் சத்தியஜீவியம் ஆவது திருவுருமாற்றத்தின் 4 பகுதிகள். இது நடந்தால் மனிதன் சத்தியஜீவனாவான். இது பரிணாமம். சத்தியஜீவன் உலகில் வாழும் வாழ்வு தெய்வீகவாழ்வு. அதை அடைவது எப்படிஎன்பது கேள்வி. முன் அத்தியாயங்களில் சச்சிதானந்தம் உலகமாக மாறியதைக் கண்டோம். அதன்படி இறைவன் சிருஷ்டி வழியாக உலகை வந்தடைகிறான். சத்தியஜீவன் பிறந்து, அவன் தெய்வீகவாழ்வை நடத்த மனிதன் அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு மேலே போய் பரிணாமத்தால் உயர வேண்டும். வாழ்வுக்கு மையம் ஆத்மா அல்லது ஆன்மா. தெய்வீகவாழ்வுண்டெனில் அதன் மையம் தெய்வீக ஆன்மா. அது எப்படி ஜீவாத்மா, பரமாத்மாவினின்று வேறுபடுகிறது? நாம் அகந்தையில் மேல்மனத்தில் வாழ்கிறோம். சைத்தியபுருஷனையடைய வேண்டும்என அறிவோம். அகந்தையும், சைத்தியபுருஷனும் தெய்வீக ஆன்மாவிலிருந்து எப்படி வேறுபடுகின்றனர்என அறிவதும், அதை எப்படிச் செய்வதுஎனவும் நம்முன் உள்ள கேள்விகள்.

மேல்மனம் பகுதி. தெய்வீகவாழ்வு முழுமையானது. உள்மனம் மேல்மனத்தின் ஆழ்ந்த பகுதியானாலும் முழுமையுடையதுமன்று; ஆன்மீகம் உடையதுமன்று. ஆனால் சூட்சுமம் உடையது. சூட்சுமம் ஆன்மீகமாகாது. அடிமனம் பிரபஞ்சம் முழுவதும் பரவியது; முழுமை உடையது. தன்னுள் சைத்தியபுருஷனைக் கொண்டுள்ளது. திருவுருமாற்றம் அடிமனத்தில் சைத்தியபுருஷனில் முழுமையாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

தெய்வீகவாழ்வு பிரம்மத்தின்வாழ்வு. அக்ஷரபிரம்மம் அசைவற்றது என்பதுடன் காலத்தைக் கடந்தது. அது காலத்தை விலக்குவதாலும்,

அசைவை விலக்குவதாலும் முழுமையாகாது. அதே காரணத்தால் க்ஷரபிரம்மம் - காலத்தைக் கடந்த நிலையை விலக்குவதாலும், சலனமற்ற நிலையை விலக்குவதாலும் - முழுமையான பிரம்மம் ஆகாது. முழுமையான பிரம்மம் காலம், காலத்தைக் கடந்த இரு லோகங்களையும் உடையதாக இருக்க வேண்டும். அதன் வாழ்வு தெய்வீகவாழ்வாகும். கடவுள் (God) என நாம் கொள்வது காலத்தைக் கடந்த நிலையில் உள்ளது. ஜீவாத்மாவும் காலத்திலில்லை. எனவே தெய்வீகவாழ்வுக்குரிய ஆன்மாவாக ஜீவாத்மா, பரமாத்மா, கடவுள் ஆகியவை பயன்படா. அது முழு பிரம்மத்தின் ஆன்மாவாக இருக்கும். காலமும், கடந்த நிலையும் அதற்குண்டு. கடவுளும், ஜீவாத்மாவும் அதற்கு விலக்கன்று. பிரம்மம் அதற்கு எப்பொழுதும் விலக்கன்று. எந்த நேரமும் தெய்வீக ஆன்மா முழு பிரம்மத்தின் முன்னிலையில் இருக்கும்.

சமாதி நிலையில் - நம்மை மறந்த நிலையில் - நாம் பிரம்மத்தை எட்டுவது மோட்சம், சித்திளனப்படும். அது பகுதியான பிரம்மம். அது முழுமையான பிரம்மமானால் நம்மை மறந்த நிலை தேவையில்லை. விழிப்பில் சமாதி நிலையை அடைவது ஸ்ரீ அரவிந்தம். அதைப் பெற திருவுருமாற்றம் தேவை. தெய்வீகவாழ்வின் முழுமைக்குச் சமாதி விலக்கு, நிஷ்டை விலக்கு. விலக்குஎன்ற நிலை விலக்கு. அதனால் ஏகன்என்ற பரமாத்மா மட்டுமோ, அநேகன்எனும் ஜீவாத்மா மட்டுமோ தெய்வீகவாழ்வுக்குரிய ஆன்மாவாக முடியாது. தெய்வீக ஆன்மா இரண்டிலும் ஒரே சமயத்தில் வாழ்வது அவசியம். அகந்தை உலகினின்று பிரிந்து தனித்து வாழ்வதால் தெய்வீகவாழ்வுக்கு பிரிவினை விலக்கு. அதனால் அகந்தை அவ்வாழ்வு மையமாக முடியாது. எதையும் விலக்காமல் எல்லாவற்றையும் சேர்த்தால் சிறியது, பெரியது, லீலை எப்படியிருக்க முடியும்? பிரிவினையற்ற பகுதிகள் லீலைக்கு உதவும். அம்சத்தைப் பிரிக்கலாம்; அங்கத்தைப் பிரிக்க இயலாது. தெய்வீக ஆன்மாவின் அம்சங்கள்,

1) அஞ்ஞானத்தைவிட்டு விடுபட்டதாகும்.

2) முழு பிரம்மத்தின் முன்னிலையில் எந்த நேரமும் இருப்பது அவசியம்.



3) காலமும், காலத்தைக் கடந்த நிலையும் இணையும் இடத்திலிருக்கும்.

4) (God) கடவுளுடனும், ஆத்மாவுடனும், ஆத்மரூபத்துடனும், ஆத்ம சக்தி (individuality) இடையறாத தொடர்புள்ளதாக இருக்கவேண்டும்.

5) ஜீவன், ஜீவியம், ஆனந்தம் பிரிந்து, மாறி, லீலை செய்யும்பொழுது அம்சம் பிரியலாம்; அங்கம் பிரியக்கூடாது.

6) பரமாத்மாவிலும், ஜீவாத்மாவிலும் ஏககாலத்தில் உறைய வேண்டும்.

7) அகந்தை, காலம், மனம், மேல்நிலை ஆகியவற்றின் அம்சங்கள் நீங்கி, சத்தியஜீவியத்தின் அம்சங்கள் செயல்பட வேண்டும்.

8) மனித இயலாமை அங்கு இயல்பான கட்டுப்பாடாக இருக்கவேண்டும்.

9) எல்லா ஜீவன்களையும், அவர்கள் ஜீவியத்தையும், ஆனந்தத்தையும் தன்னுள்ளே தன் ஜீவியமாக, ஆனந்தமாக அனுபவிக்க வேண்டும்.

10) பிரிவினை முழுமையின் ஆனந்தத்தை அதிகப்படுத்த வேண்டும்.

## பக்கம் 150 / பாரா 1

சத்தியஜீவியம்என்றால் என்னஎன நாம் தெளிவாக அறிந்து கொண்டோம். மனித வாழ்வின் அடிப்படையான மனப்பான்மையி-லிருந்து அது வேறுபட்டதுஎன்பதை எப்படி வேறுபட்டதுஎனத் தெளிவு செய்ததால் நமக்கு இத்தெளிவு கிடைத்தது. தெய்வம், தெய்வீக வாழ்வுஎன்பவற்றைப்பற்றி நாம் தெளிவு பெற்றுவிட்டோம். தெரிவதற்கும் அறிவு தெளிவுபெற்று அறிவதற்கும் இடையேயுள்ள தூரம் ஏராளம். பலன் பதினாயிரம் மடங்கு. மின்னல் சக்தியை உலகம் அறியும். திருடன் கன்னக்கோலில் அந்த மின்சாரத்தைப் பிடித்துக் கொள்கிறான்என நாம் நம்பினோம். மின்சாரம் என்னஎன்று அறிவு கண்டுபிடித்தபின் நூறாண்டுகளாக நாம் மின்சாரத்தையும், அதன் பலனையும் அனுபவிப்பது ஏராளம். இது அறிவால் பெறும் தெளிவு அளிக்கும் பலன். சுமார் 150, 200 ஆண்டுகளாகக் கோர்ட் செயல்படுகிறது. பொதுவாக நம் எல்லோர்க்கும் நம்மைப் பாதிக்கும் எல்லாச் சட்டங்களும் தெரியும். நடைமுறையில் நாம் ஆயிரம் வகைகளில் ஏமாந்து போகிறோம். தெரிந்தாலும் கோர்ட்டால் பலன்பெற நம்மால் முடிவதில்லை. ஏனெனில் நமக்கு கோர்ட் விஷயத்தில் அறிவில் தெளிவு

இல்லை. ஒரு வக்கீலுக்கு அவ்விஷயத்தில் நமக்கில்லாத தெளிவு உண்டு. அவர் சட்டத்தால் பெறும்பலன் நாம்பெறும் பாதுகாப்புடன் ஒப்பிட்டுக் காண முடியாது. முன் அத்தியாயங்கள் தெய்வம்என்பதை நமக்கு அப்படி விளக்கியுள்ளது. இதுவரை அத்தெளிவில்லாமல் நாம் இருந்தோம். விவரமற்ற சொல்லாகத் 'தெய்வம்' மக்களால் பயன்படுத்தப்படுகிறது. தெய்வம் ஓர் உயர்ந்த சக்திஎன்பதையே நாம் இதுவரை அறிந்தோம். இந்த அத்தியாயங்களில் தெய்வம்என்ற கருத்தைத் தத்துவரீதியாக விளக்கி, தெய்வத்திற்கும் மனித குலத்திற்கும் உள்ள தொடர்பை விளக்கியுள்ளோம். அதனால் நம் இலட்சியங்கள் விளக்கம் பெற்றன. எதிர்காலப் பரிணாமம் எதிர்கொள்ளும் பாதை துலங்குகிறது. பிரபஞ்சவாழ்வில் நம் பங்கு என்னஎன அறிகிறோம். தெய்வம் நித்தியமான சத்தியம்என்பதை அறிவு ஏற்றுக்கொள்ளும் வகையில் எடுத்துக் கூறினோம். அதனினின்று உலகம் எப்படி வந்ததுஎன்ற சிருஷ்டியின் இரகஸ்யத்தை அறிந்தோம். உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி இரவில் தரையில் அதன் கூட்டிற்கு வரவேண்டும். உலகை வென்ற அலெக்ஸாண்டர் முடிவாக நாடு திரும்பினார். பூரணம், முழுமைஎன்பதை பிரம்மம் என்ற சொல் குறிக்கிறது. அம்முழுமையின் தன்மை வெளியே போனது மீண்டும் உள்ளே வரவேண்டும்என்பது. நாம் பேசும் சொற்கள் மீண்டும் நம்முள் வருவதில்லை. நம் செயல்களும் அப்படியே. இது பகுதிகளின் தன்மை. பூமியிலிருந்து எழும் மரம், செடி, கொடி, மனிதன், அனைத்தும் பூமிக்கு மீண்டும் வருகின்றன. அது முழுமையின் குணம். உலகம் பிரம்மத்திலிருந்து எழுவது சிருஷ்டி. அது மீண்டும் பிரம்மத்துள் வர வேண்டும். அது பரிணாமம். தெய்வீகவாழ்வை நாம் எப்படியடைய முடியும்என்ற கேள்வியை இப்பொழுது எழுப்பினால் பதில் கிடைக்கும் வாய்ப்புண்டு. ஆத்மா விடுதலையடைந்து, பூரித்து, பரமாத்மாவில் கரையும் மோட்சம் நாம் இதுவரை அறிந்தது. உலகில் அவ்ஆத்மா பரிமளிப்பது தெய்வீகவாழ்வு. நம் விசாரத்தில் ஒரு குறையுண்டு. தெய்வம் மனிதசுபாவத்தை அடையும் முறையே நாம் இதுவரை கண்டது. ஆனால் மனிதன் பரிணாமத்தால் உயர்ந்தெழும் தெய்வம். அந்த அம்சத்தை நாம் இதுவரை ஆராயவில்லை. இரண்டிற்கும் அடிப்படையான வித்தியாசமில்லை. தெய்வம் அஞ்ஞானத்தை அறியாது. மனிதன் அஞ்ஞானத்தில் வாழ்பவன். அதனினின்று விடுதலை பெற்று தெய்வமாவது பரிணாமம். மாற்றம் அடிப்படையில் இல்லை. மாற்றம் தோற்றத்திற்கும், அதன் வண்ணத்திற்குமேயுரியது. இதுவரை நாம் கண்டதன் அடிப்படையில் தெய்வீகவாழ்வை அறிய முற்படலாம்.



## பக்கம் 151 / பாரா 2

தெய்வீக ஆன்மா எங்கிருக்கும்? ஜடத்துள் நுழைந்தால் அது அஞ்ஞானத்தால் சூழப்படும். அப்படியில்லாவிட்டால் எங்கே அந்த தெய்வீக ஆன்மா இருக்கும்? எப்படியிருக்கும்? அதன் ஜீவியம் எத்தகையது? அது சத்தியத்தின் ஆதியில் வாழ வேண்டும். அடிப்படை ஐக்கியத்தில் அது உறையும். அதனுடைய உலகம் அதன் சொந்தமான அனந்தமான ஜீவனாகும். சத்புருஷன் போலவே அது இருக்க வேண்டும். சத்புருஷனிருப்பது சத். அவனுக்கு லீலையில்லை. தெய்வீக ஆன்மா இறைவனிடமிருந்து - பரமாத்மாவிடமிருந்து - வேறுபட்டதுடன் அந்த வேறுபாட்டை மாயையால் அனுபவிக்க வேண்டும். சத்தியஜீவியத்தின் இருபாகங்களாலும் - ஹிரண்ய கர்ப்பம், பிரக்ஞா என்ற காலத்தைக் கடந்த சத்தியஜீவியம், காலத்துள் உள்ள சத்தியஜீவியம் - அவற்றிடையே உள்ள வேறுபாட்டையும் தெய்வீக ஆன்மா அனுபவிக்க வேண்டும். தெய்வீக ஆன்மா காலத்துள்ளோ, காலத்தைக் கடந்தோ இருக்க முடியாது. இரண்டிலும் இருக்க வேண்டும். இரண்டிலுமிருப்பதால் காலத்தைக் கடந்துள்ள கடவுளிடமிருந்துள்ள வேறுபாட்டை அனுபவிக்க முடியும். அதேபோல் மற்ற ஜீவாத்மாக்கள் காலத்துள்ளிருப்பதால் அவற்றிடமிருந்தும் உள்ள வேறுபாட்டை தெய்வீக ஆன்மா அனுபவிக்க முடியும்.

## பக்கம் 151 / பாரா 3

அப்படிப்பட்ட தெய்வீக ஆன்மா சச்சிதானந்தத்துள்ளிருக்கும். அதன் லீலையுள் அடங்கியிருக்கும். அதனால் அதன் ஜீவனின்வாழ்வு தூய்மையான அனந்தமான சுயவாழ்வாக அமையும். அதற்கும்

பிரகிருதியுண்டு. அது மரணமிலா வாழ்வாகும்; சுதந்திரமான லீலை ஆகும்; பிறப்பும், இறப்புமற்றதாகும். உடல் மாறாது; அஞ்ஞானமோ, இருளோ இருக்காது. நம் உடல் அகந்தையாலும், அஞ்ஞானத்தாலும் வாழ்கிறது. தெய்வீக ஆன்மாவின் வாழ்வு நம் வாழ்வுக்கு எதிராக இருப்பதைக் காணலாம். நம்ஜீவியம் சுயநலமான அகந்தையின் ஜீவியம். அது மனிதவாழ்வின் குறுகிய அளவுக்கு உட்பட்டது. அதன் அடிப்படை மனத்திற்குரிய இருளான படபடப்பு. அதன் நிலை அடிக்கடி மாறும். தெய்வீக ஆன்மாவின் ஜீவியம் தூய்மையான அளவில்லாத சக்தி. அது நிலையான அடிப்படையில் உள்ளது. ஒளிமயமான அமைதி அதன் அடிப்படை. ''இந்தியர்கள் திறமையற்றவர்கள்'' என ஒருவர் நம்மிடம் கூறினால், நம்மால் அதை அமைதியாகக் கேட்டுக்கொண்டு, அர்த்தமுள்ள பதிலை நிதானமாகக் கூற முடியாது. கோபம் அளவுகடந்து எழும், உடல் பதறும், உணர்ச்சி துடிக்கும். நாம் திறமையற்றவர்என்ற உண்மையை ஏற்கும் நிதானம் இருக்காது. ''உங்கள் நாட்டில் திறமையற்றவரில்லையா?'' எனக் கேட்போம். நம் பதில் இருளாலானது, அறிவும் பொறுமையும் இல்லாதது. தெய்வீக ஆன்மா நம்மிலிருந்து வேறுபட்டு செயல்படும். அது சுதந்திரமாகச் செயல்படும். வேறு ஞானத்தின் உருவங்களை - மாற்று அபிப்பிராயங்களை - அது அமைதியாக எதிர்கொள்ளும். அதே போல் மாறிய சக்திகளை - நம்மைவிட வலிமையான, எளிமை-யானவர்களை - மனக்குறையின்றிச் சந்திக்கும். சத்தியத்தினின்று வழுவாது. ஒருமையை இழக்காது. அடிப்படையான ஒளியை மறக்காது. தெய்வீகவாழ்வின் சுமுகம் அதை விட்டுப் பிரியாது. நமக்குத் திறமையில்லைஎன ஒருவர் கூறுவது உண்மை. அத்திறமையை நாம் பெற வேண்டும்என உணரும். கோபம் இயலாமை. அந்த இயலாமை இல்லாததால் அவர் கூறும் உண்மையை ஏற்பதுடன், அந்நிலை இந்தியருக்கு வரக் காரணத்தை - அடிமைவாழ்வை - அறியும். அறிவதால் நிலைமை புரியும். புரிவதால் நிதானம் அழியாது. நாமும் அவரும் வேறு வேறு ஜீவாத்மாக்கள்என்ற ஆன்மீகஉணர்வு சுமுகம் தருவதால் மனம் பேதலிக்காது. அவர் மனத்தின் ஒளி திறமை இன்மையை அறிகிறதுஎன நம் மனத்தின் ஒளி அறியும்பொழுது இருள்



எழ வழியில்லை. ஜீவன், ஜீவியத்தின் தன்மைகளைக் கூறியது போல் ஆனந்தத்தையும் கூறவேண்டும். நமக்குரிய சந்தோஷம் வரும், போகும். அது சந்தர்ப்பத்தைப் பொருத்தது. தெய்வீக ஆன்மாவின் ஆனந்தம் அதனுடன் பிறந்தது, விலக முடியாதது. ஆனந்தம்என்பது அனுபவம். சத் தன்னையறிந்து அனுபவிக்கும் பொழுது ஆனந்தம் எழுகிறது. நமக்கு வெற்றி ஆனந்தம் தரும், தோல்வி வருத்தம் தரும். நம் ஆனந்தம் வெற்றி, தோல்விஎன்ற புற நிகழ்ச்சிகளைப் பொருத்தது. தெய்வீக ஆன்மாவின் ஆனந்தம் சுயமான ஆனந்தம். தான் ஆன்மா என அறிந்து அனுபவிப்பதால் ஏற்படும் ஆனந்தம். காலத்துள் அவ்வானந்தம் சுதந்திரமாக, வெறுப்பு, விருப்பால் பாதிக்கப்படாமல் மாறும். வேண்டியவரைப் பார்த்தால் சந்தோஷமும், வேண்டாதவர் வெறுப்பும் தருவது நம் நிலை. தெய்வீக ஆன்மாவுக்கு வேண்டாதவரில்லை. வேண்டியவரும், வேண்டாதவரும் வெவ்வேறு வகையான சந்தோஷம் தருவர். நம் மகன் முதற் பரிசு பெற்றதை வேண்டியவரிடம் சந்தோஷமாகக் கூறுகிறோம். வேண்டாதவர்என ஒருவர் நம்மை நினைத்தால் அவரிடம் அதைக் கூறாமலிருக்கும் கட்டுப்பாட்டை ஏற்பதால் சந்தோஷப்படுகிறோம். நம் ஜீவன் பிரிந்து நிற்பதுபோல் அது பிரியவில்லை. அகங்காரம் நம்மை ஆட்கொள்வது போல் தெய்வீக ஆன்மாவை ஆட்கொள்ள அது அங்கில்லை. ஆசை அறிவின்றி எழுந்து குதர்க்கமாகப் பேசும்நிலை அதற்கில்லை.

## பக்கம் 151 / பாரா 4

நம்நாட்டில் வாழ்வை விலக்கி தவத்தை மேற்கொண்டனர். இக வாழ்வில் இலட்சியமில்லைஎனப் பரவாழ்வில் அதைத் தேடினர். அது யோகத்தை மேல்மனத்துள்ளிருத்தி அடிமனத்தை புறக்கணித்தது. அதனால்தான் அவர்களால் உணர்விலிருந்து வெற்றி பெற இயலவில்லை. பிரம்மம் உயர்வு, வாழ்வு தாழ்வுஎன்றனர். இது மாறுவது ஸ்ரீ அரவிந்தம். இங்கு வாழ்வு ஏற்கப்பட வேண்டும். அடி மனத்தில் செய்யும் யோகம் மேல்மனத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். பிரம்மத்தை ரிஷிகள் இரண்டாகப் பிரித்து ஒன்றை ஏற்றனர்.

ஸ்ரீ அரவிந்தம் பிரம்மத்தை முழுமையாக்கியது. மனத்தால் தேடினால் பிரம்மம் பகுதியாகும் என்பதால், சத்தியஜீவியத்தால் முழுமையான பிரம்மத்தை நாடியது. பிரம்மமே வாழ்வுஎன்றது. வாழ்வில் பிரம்மம் வெளிப்படுவதைக் கண்டது. வாழ்வையே பிரம்மமாகக் கொண்டது. ஜடத்திற்கும் பிரம்மத்திற்கும் வேறுபாடில்லைஎன உணர்ந்தது. சர்வம் பிரம்மம்என்ற ரிஷிகளின் வாக்கை வாழ்வின் இலட்சியமாகவும், யோகத்தின் உயர்ந்த கட்டமாகவுமாக்கியது. பிரம்மம் ஜடத்துள் வெளிப்படுவது பிரம்மம் ஜடத்தைப் பிரம்மமாக மலரச் செய்வது, ஆனந்தத்தை நிலையாக்குவது. பிரம்மம் ஆனந்தத்தை அடுத்த உயர்ந்த கட்டத்தில் அனுபவிப்பது. பூலோகம் சுவர்க்கமாவது என்பதால்,

✡ தெய்வீக ஆன்மா என்றும் பிரம்மத்தின் முன்னிருப்பது அவசியம்.

✡ பிரம்மத்தைவிட்டு தெய்வீக ஆன்மா விலக முடியாது.

✡ தோற்றமான வாழ்வு பகுதியானாலும், அதை மேற்கொண்டபொழுதும் பகுதி முழுமையாகும், தோற்றம் விஷயமாகும். அவையும் தெய்வீக ஆன்மாவின் முன்னிருந்து பிரம்மத்தை விலக்காது.

✡ சச்சிதானந்தமும் கடந்த நிலையில் காலத்தைக் கடப்பதால், தன் முழுமையை அந்த நேரம் இழக்கும். முழுமையான பிரம்மத்தை விட்டகன்று பகுதியான பிரம்மத்தின் முன் நிற்கும். சச்சிதானந்தத்திற்கும் முழுமையுண்டு. அது பிரம்மத்தின் முழுமை. தெய்வீக ஆன்மா அதை அறியவல்லது.

✡ ஜனாதிபதியை அனைவரும் பார்க்க முடியாது. பார்ப்பவர் சந்திக்க முடியாது. அதற்குரியவர் பார்க்கலாம், சந்திக்கலாம். உயர்ந்தோர் வேண்டும்பொழுது பார்க்கலாம். எளிய மனிதனும் பொதுக்கூட்டத்தில் தூர இருந்து பார்க்கலாம். பிரதமரும் அவருடன் எப்பொழுதும் இருக்க முடியாது. ஆனால் ஜனாதிபதியின் P.A. (personal assistant) எப்பொழுதும் அவர் முன்னிலையிலிருப்பார். அதைப்போல் தெய்வீக ஆன்மா எப்பொழுதும் பிரம்மத்தின் முன்னிலையிலிருக்கும். இது அது முயன்று பெறுவதில்லை. தெய்வீக ஆன்மாவுக்கு இயல்பாக அமைவது.

✡ அதனால் தெய்வீக ஆன்மா காலமும், கடந்ததும் சந்திக்குமிடத்தில் இருக்கவேண்டும். அந்தநிலை அனைத்துக்கும் இல்லை. பரமாத்மா-வுக்கோ, ஜீவாத்மாவுக்கோ, அகந்தைக்கோ இல்லை. பரமாத்மாவும், ஜீவாத்மாவும் காலத்தைக் கடந்தவர். அகந்தை காலத்துள் உள்ளது.



✡ சைத்தியபுருஷனுக்கு அந்தஅம்சம் உண்டெனினும் அதற்கு ஒரு பகுதியில் - மனம், உடல் - மட்டும் அதுஉண்டு. சத்தியஜீவனுக்கே அதுஉண்டு.

## பக்கம் 152 / பாரா 5

பரமாத்மா, ஜீவாத்மாஎன்பவை பிரம்மத்தின் இருதுருவங்கள். நாம் ஒருமுனையில்தானிருக்க முடியும். இருமுனைகளிலும் இருக்க அஞ்ஞானம், பகுதி, மேல்மனம், காலம், அகந்தை, சிறியதுஎன்ற தடைகள் கூடா. அஞ்ஞானம் தடையென்பதுபோல் ஞானமும் ஒருதலைப்பட்டதானால் தடையாகும். ஜீவாத்மா பகுதி, பரமாத்மா முழுமைஎன்பதால் ஜீவாத்மா தடை, பரமாத்மா தடையில்லைஎன நினைப்போம். நாம் முழுமைஎன்பது பிரம்மத்தின் முழுமை. நமக்கு முழுமையான பரமாத்மா, பிரம்மத்திற்குப் பகுதி. ஏனெனில் பரமாத்மாவும், ஜீவாத்மாவும் சேர்ந்த முழுமையே பிரம்மம். காலத்தைக் கடந்தது முழுமையென நாம் நினைக்கலாம். அதுவும் முழுமையில்லை. எல்லா ஜீவன்களும் செயல்படும்பொழுது எங்குச் செயல்படுகிறார்-களோ அந்த லோகத்தின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர். அவதார புருஷனும் மனிதனாய்ப் பிறந்தால் மனிதன் கட்டுப்படும் கர்மத்திற்குக் கட்டுப்பட வேண்டும். அவதார புருஷன் புவியில் பிறப்பதற்குமுன் - தன் சொந்த இடத்தில் - கர்மத்திற்குக் கட்டுப்பட்டவனில்லை. எல்லா ஜீவன்களும் அவரவர் சொந்த லோகத்தில் இருக்கும்பொழுது பிரம்மத்தின் இருமுனைகளான - One, Many - பரமாத்மா, ஜீவாத்மாவில் ஒரேசமயத்தில் உறைவர். அவர் செயல்படும் லோகம் ஜடலோகமானாலும், உலகமானாலும், பிரபஞ்சமானாலும், காலத்தைக் கடந்த லோகமானாலும், ஒரு முனையில்தானிருக்கமுடியும். தெய்வீக ஆன்மா பிரம்ம வாழ்வு முழுவதும், எல்லா லோகங்களிலும் செயல்படுகிறது. அப்படிச் செயல்படும் காலத்தில் பிரம்மத்தின் இரு முனைகளிலும் (மற்ற ஜீவன்கள் தங்கள் சொந்த லோகத்தில் இருப்பதைப்போல்) எப்பொழுதுமிருக்கும். இந்நிலை காலமும்,

கடந்ததும் இணைந்தநிலை. ஜில்லாவில் சப்-இன்ஸ்பெக்டர், D.E.O., D.M.O. எனப் பல அதிகாரிகளுண்டு. அவரவர் தங்கள் தங்கள் இலாக்காவில் மட்டும் செயல்படலாம். கலெக்டர் ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்தவரானாலும், எல்லா இலாக்காக்களிலும் எந்த நேரமும் செயல்பட முடியும். தெய்வீக ஆன்மாவின் நிலை ஓரளவு அது போன்றது.

இப்பிரிவு இருப்பதால் ஒன்றையேற்று, அடுத்ததை மறுக்க வேண்டும். அந்நிலை தெய்வீக ஆன்மாவுக்கில்லை. ஒன்று அனந்தம் செறிந்த ஐக்கியம். அடுத்தது அனந்தம் வெளிப்பட்டு நீண்டு பரவிய நிலை. இரண்டாம்நிலை முதல்நிலையில் வித்தாக இருப்பதை தெய்வீக ஆன்மா அறியும். மனம் வெளிப்படாததை இல்லைஎனக் கருதும். தெய்வீக ஆன்மா அந்தத் தவற்றைச் செய்யாது. இவற்றை - சத்தியம், நியாயம் - வேதம் கூறியது. இதுவே உன்னதமான அத்துவைதம், பேதமற்ற நிலை.

## பக்கம் 153 / பாரா 6

சிருஷ்டிஎன்பது லீலை. ஒன்று பலவாக மாறுவது. ஜீவன், ஜீவியம், ஆனந்தம் அப்படி மாறுகின்றன. நம் பார்வைக்கு அவை பகுதிகளாகப் பிரிவதாகத் தோன்றுகின்றன. வேறுபட்டவையாகக் காட்சியளிக்கின்றன. ஆனால் அவற்றைத் துண்டாடாமல் அம்சங்களை மட்டும் பிரிப்பதை நம் மனம் அறிவதில்லை. ஜீவனில் உள்ள ஒருமை எப்பொழுதும் மாறுவதில்லை. அதன்வெளிப்பாட்டில் மாற்றமுண்டு. எல்லாரூபங்களும் பரமாத்மாவில் வித்தாக உள்ளவையே. மௌனத்தி-லிருந்து எழுவது சப்தம். ரூபம் அரூபத்தினின்று வருகிறது. சலனமற்ற அமைதியினின்று சக்தி எழுகிறது. காலத்தைக் கடந்த சுய ஞானத்தி-லிருந்து சூரியஒளிபோன்ற சுயதெளிவு எழுகிறது. சத்புருஷனிலிருந்து இயற்கைஎனும் பிரகிருதி வெளிவருகிறது. அமைதியான ஆனந்தம் ஆயிரம்வகையான இன்பஉணர்வுகளை எழுப்புகிறது. அவை இரு வேறு நிலைகளில்லை. அவை இரண்டில் ஒன்றான (biune) இரு வகைத் தோற்றம். பிரம்மம் சிருஷ்டியானாலும் சிருஷ்டியும் பிரம்மமே.



அஞ்ஞானமில்லாத பொழுது சிருஷ்டி பிரம்மமே. பிரம்மத்தைவிடக் குறைந்ததில்லை. தோற்றம் மாறுகிறது, விஷயம் மாறுவதில்லை. அவை வெவ்வேறான இரண்டில்லை, இரண்டான ஒன்று.

## பக்கம் 154 / பாரா 7

மாற்றத்தில் சத்தியஜீவிய நிலைகள் மூன்றுண்டு. மனம் அவற்றை மூன்று வெவ்வேறு நிலைகளாகக் காணும். அவை ஒன்றில் மூன்றானவை. அது சச்சிதானந்தம் தன்னைத் தானே வெளிப்-படுத்துவது. சச்சிதானந்தம் மூன்று அம்சங்களை ஒன்றாக வெளிப்படுத்தினால் தெய்வீக ஆன்மா ஒரே பார்வையில் அவற்றைத் தழுவி அறியும் - சத்தியஜீவியத்தின் அடிப்படை பரந்த ஒருமித்த ஞானம் - அம்மூன்றுநிலைகள்:

1) தெய்வீக ஆன்மா கருத்தாலும், உள்ளுணர்வாலும், உணர்ச்சியாலும் தெய்வீகமாக முதல் நிலையை அறியும். அனைத்தும் பிரம்மம், தன் சொந்த பிரம்மம், எல்லோருடைய பிரம்மம் ஒரே பிரம்மஜீவன், ஒரே பிரம்மபிரகிருதி. பிரகிருதி தனித்தனியே பிரிந்ததில்லை. தன் சுய ஜீவியத்தை விட்டுப் பிரிந்து நிற்பதன்று.

   (கடவுள் அனைத்துமானார்).

2) தெய்வீக ஆன்மா கருத்தாலும், உள்ளுணர்வாலும், உணர்ச்சியாலும் தெய்வீகமாக இரண்டாம்நிலையை அறியும். அனைத்தும் பரமாத்மாவின் ஆத்மரூபங்கள்என அறியும். அவை ஒவ்வொன்றும் தன் ஜீவனைப் பரமாத்மாவில் பெற்றிருக்கும். பரமாத்மாவில் அதனுடைய நோக்கம் உண்டு. அனைத்துடனும் அதற்கு ஐக்கியத்தில் உறவுண்டு. ஆனால் அனைத்தும் பரமாத்மாவை நம்பியுள்ளன. அனைத்தும் அவனுடைய ரூபம் அவனனந்தத்தில் உறைவது.

   (தெய்வீக ஆன்மா ஆத்ம ரூபங்களை அறியும்).

3) தெய்வீக ஆன்மா கருத்தாலும், உள்ளுணர்வாலும், உணர்ச்சியாலும் அனைத்தின் தனித்தன்மையை அறியும். ஜீவாத்மாவில் அவற்றிற்கு உண்டான தனியான நோக்கத்தை அறியும். ஒவ்வொன்றும் பரமாத்மா

அதனுள் வாழ்வதை அறியும். அதனால் ஒவ்வொன்றும் நிழற்படமன்று, மாயையன்று, அலைகளில் எழும் நுரையன்று. ஆனால் ஒவ்வொன்றும் முழுமையுள் முழுமை (இவை மனத்திற்குப் புலப்படாத உருவகங்கள்), அனந்தசத்தியத்தை மீண்டும் கூறும் சத்தியம், கடலான அலை, பிரம்மமான சிருஷ்டி. ரூபத்தின் பின்னால் அதன் முழுமையைக் காணும் பொழுது அது தெரியும்.

கடவுள் அனைத்துமாவது, பெற்றோர் பிள்ளைகள் உடலாவது போன்றது. கடவுள் அனைத்து ஆன்மாவாவது, பெற்றோர் பிள்ளைகள் சுபாவமாவதுபோன்றது. கடவுள் அனைத்தின் தனித்தன்மையாவது பெற்றோர் பிள்ளைகளின் அறிவாவதுபோல் சொல்லலாம். குடும்பத்தை அறிந்தவர் வீட்டினுள் நுழைந்தால் பெற்றோரையும் பிள்ளைகளையும் பார்த்து, உடலமைப்பு - ஜாடை - சுபாவம், அறிவு, ஆகியவை பெற்றோருடையதுஎன ஒரே பார்வையில் அறிவதுபோல் தெய்வீக ஆன்மா உலகையும், அதன் ஆத்மாக்களையும், தனித்தன்மைகளையும் அறியும்.

## பக்கம் 154 / பாரா 8

இறைவனே, நம்முள் உள்ள இறைவனே, உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளாக மாறினான்என்றால், நமக்கு மற்ற பொருள்கள், ஜீவராசிகளுடன் உள்ள ஒருமை விளங்கும். அனைத்தையும் அவனுள் காண்கிறோம்எனில் ஒருமையில் பன்மை விளங்கும். அனைத்திலும் அவனைக் காண்கிறோம்எனில் மனிதன் ஜீவாத்மாஎன விளங்கும். நம் மனம் குறையுடையது. இந்த மூன்றுநிலைகளில் மனத்தால் ஒரு நிலையைத்தான் அறிய முடியும். இம்மூன்றும் சுயஞானம். ஒன்றையறிய மனம் மற்ற இரண்டையும் விலக்கிப் பார்க்கிறது. மனத்தின் சித்தி குறையுடையது. அனைத்தையும் விலக்கி, ஒன்றை அறிவது. சத்தியம் பூரணமானது. மனம் அதில் குறையைக் கொண்டு வரும். ஒன்றைச் சேர்த்து, மற்றதை விலக்கும். ஆனால் சத்தியஜீவன் எதையும் விலக்காது. சத்தியஜீவன் சத்தியஜீவியத்தின் முக்கிய அம்சம் பெற்றவன். அதன் இரு முக்கிய அம்சங்கள் (1) அனந்தமான ஐக்கியம்



(2) ஒருமையுள்ள பூரணம். சத்தியஜீவியம் மூன்று தனித்த அம்சங்களைக் காண்பதில்லை. ஒன்றில் மூன்றாக இவற்றைக் காண்கிறது. ஒருவர் ஆசிரியர், எழுத்தாளர், அரசியல் தலைவர் எனில், அவருடைய மூன்று அம்சங்கள் அவரை மூன்று தனி மனிதர்களாகப் பிரிப்பதில்லை. மூவரும் ஒருவரே. திறமை மூன்று. இந்தியர் பலதரப்பட்டவர் - தமிழர், தெலுங்கர், வங்காளி என 18 வகையானவர், இந்து, முஸ்லீம், கிருத்துவர், ஜைனர், புத்தர் எனவும் மாறுபட்டவர். சிறுவர், இளைஞர், முதியவர் எனவும், ஆண், பெண் எனவும் வேறுபட்டவர் - என்றாலும், பாகிஸ்தான் படையெடுத்தது எனில், அனைவரையும் இந்தியராகக் காணலாம். எந்த நாட்டில் இருந்தாலும் இந்தியர் இந்தியரே. அனந்தமான ஐக்கியம், அசையாத சத்தியம்.

## பக்கம் 155 / பாரா 9

இந்த தத்துவத்தை வேதம், தெய்வங்களைக் கொண்டு விளக்குகிறது.

1) எந்த ஒரு தெய்வமும் - அக்னி, விஷ்ணு, ....... - எல்லாதெய்வமாகும்.
2) எல்லாத் தெய்வங்களும் ஒரு தெய்வத்தில் அடக்கம்.
3) ஒவ்வொரு தெய்வமும் தனித்தது. மற்ற தெய்வங்களைவிடத் தாழ்ந்தவை. குருக்களாகவும், வேலையாளாகவும் செயல்படும்.

ஆத்மா இந்நிலையை ஏற்றால் அதன் ஜீவாத்மமையம் மற்ற ஜீவாத்மாக்களுடன் கொள்ளும் தொடர்பு ஐக்கியத்தின் அடிப்படையில் இருக்கும். அந்த ஐக்கியத்திலிருந்து அனைத்தும் எழும். அதன் பின்னணியில் மாறுபட்ட அடுத்த நிலைக்கு நீட்டப்பட்ட ஐக்கியம் இருக்கும். அங்கிருந்து மீண்டும் வந்து தனித்தன்மையை அனுபவிக்கும். ஒவ்வொரு தெய்வமும் உலகை சிருஷ்டித்த பிதா. அவனே அவர் செயலுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தவன். அதுவே ஆதி. சிருஷ்டியில் வெளிப்படுவதும் அதுவே. அனைத்தையும் உட்கொண்ட 'ஒன்றும்' அதுவே.

## பக்கம் 155 / பாரா 10

பிள்ளைகள் தாய் வயிற்றில் இருந்து பிறந்ததால் அவர் உடல் தாயுடன் ஒன்றியது. அனைவரையும் தாயினுள் காண்பதால் அனைத்துப் பிள்ளைகளும் ஒன்றானாலும், தனித்தனி மனிதரே. எல்லோரிலும் தாயைக் காண்பதால் அவர்களிடம் உள்ள சுபாவம், தனித்தன்மை - பிரியம், பொறுமை, அன்பு, கோபம், பாசம், ஆகியவை - ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிய தனித்தன்மை. தத்துவத்தால் இதைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

1) எல்லாஜீவன்களையும் தெய்வீக ஆன்மா தன்னுள் அனுபவிக்கிறது.
2) ஒவ்வொருவருடன் தெய்வீக ஆன்மாவுக்குள்ள தொடர்பை தெய்வீக ஆன்மா தன்னுள் இரண்டறக் கலந்த நிலையில் அனுபவம் பெறுகிறது.
3) எந்த ஒரு ஜீவாத்மா தன்னுள் தன்னை அனுபவிப்பதையும், தெய்வீக ஆன்மா தன்னுள் தன் சொந்த அனுபவமாகப் பெறுகிறது.

அறியாமை வந்து பிரிவினையை ஏற்படுத்தவில்லைஎன்பதால், அடிப்படை ஐக்கியம் அசையாமலிருப்பதால் தெய்வீக ஆன்மா இந்த மூன்று நிலைகளிலும் மற்ற ஜீவாத்மாக்களைத் தன்னிலும், தன் உறவிலும், தன்னுள்ளும் அனுபவிக்கிறது. சங்கீதக் கச்சேரியில் பக்கவாத்தியம் பலஆனாலும் பாட்டும், ராகமும், ஸ்வரமும் ஒன்றே.

## பக்கம் 156 / பாரா 11

ஆத்மா ஜீவன், ஜீவியம் - சக்தி, ஆனந்தம் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு ஜீவாத்மாவுக்கும் இந்த நான்கு நிலைகள் உள்ளன. மற்ற ஜீவாத்மாக்களுக்கும் அவையுள்ளன. நமது அறிவும், உணர்வும் பிணக்கானவை. நம் கருத்தும் பிறர் கருத்தும் மோதும். ஒருவர் உணர்வும், அடுத்தவர் உணர்வும் ஒத்துப் போகா. தெய்வீக ஆன்மாவில் அதன் அம்சங்கள் - அறிவு, உறுதி, ஆனந்தம் - ஒன்றுடன் ஒன்று மோதுவதில்லை. அதன் அம்சங்கள் பிற ஜீவாத்மாவின் எந்த அம்சத்துடனும் மோதுவதில்லை. அனைத்தும்



வாசிப்பது ஒரே ராகம். வாசிப்பவர் பலர். வாத்தியங்கள் பல. பாட்டு, ராகம், ஸ்தாயி, ஸ்வரம் வேறுபடும். ஆனால் கச்சேரி ஒன்றே. கச்சேரியில் அனைத்தும் - பாடகர், வாத்தியம், பாட்டு - ஒன்றே.

## பக்கம் 156 / பாரா 12

தெய்வீக ஆன்மாவுக்குக் கடவுள் பிரம்மம். நாம்என்பது உடல். உடலில் மனமும் உணர்வும் சேர்ந்து நாம்என்ற மனிதனை ஏற்படுத்தினாலும், அவை ஆத்மாவின் வெளிப்பாடுகள். அந்த ஆத்மா ஜீவாத்மா எனப்படும். அது பிரம்மம் நம்முள் ஆன்மீகமாக வெளிப்படுவது. பிரம்மம்என்பது மூன்றாகப் பிரிந்து, பிரம்மம், புருஷா, ஈஸ்வரனாகும்பொழுது முழுபிரம்மத்தின் பகுதியான இம்மூன்றில் ஒன்றான பிரம்மம் நம் ஆத்மா எனப்படும். நமக்குப் பின்னணியில் ஆத்மா இருப்பதுபோல், தெய்வீக ஆன்மாவுக்குப் பிரம்மமாக நாம் கடவுள்எனக் கூறுவது அமையும். சத்என்பது காலத்தைக் கடந்த இறைவன். தெய்வீக ஆன்மா ஒரு புறம் காலத்தைக் கடந்த சத்தையும் - கடவுள் - மறுபுறம் பிரபஞ்சத்திலுள்ள ஜீவாத்மாக்களையும் அறியும். சத், காலத்தைக் கடந்தது, கடவுள், பரமாத்மாஎன நாம் கூறுவது அனைத்தும் ஒன்றே. ஒன்றின் பலஅம்சங்களாகும். ஜீவாத்மா பரமாத்மாவிலிருந்து வந்ததெனினும் ஒன்று மற்றதை அறியாது. சட்டசபை ஏற்பட பார்லிமெண்ட் அதிகாரம் கொடுத்ததெனினும் சட்டசபை, பார்லிமெண்ட்டை அறிவதில்லை. சில சமயங்களில் மாறுபடுவதும் உண்டு. ஜீவாத்மா, பரமாத்மாவினின்று எழுவதால் ஒன்று மற்றதை முழுவதும் அறிய வேண்டும்என்ற நிபந்தனையில்லை. தகப்பனாரும் மகனும் ஒருவரையொருவர் அறியாத நிலையில் இடையில் ஒருவர் - மாமா, சித்தப்பா, அத்தை - இருவரையும் நன்கு அறிந்து இருப்பார். அதுபோல் தெய்வீக ஆன்மா இருவரையும் நன்கு அறியும். தெய்வம் எல்லாம் அறிந்தது, எல்லாம் வல்லது, எங்கும் நிறைந்தது. இத்தனையையும் தெய்வீக ஆன்மா எப்படி அனுபவிக்கும்? ஞானத்துடன் உறவுஎனில் தெய்வம் எல்லாம் அறிந்ததுடன், எப்படி தெய்வீக ஆன்மா ஞானஉறவு கொண்டாடும்? மனிதன் அறியாமையால்

செயல்படும்பொழுது தெரிந்ததைச் சேர்த்துக் கொண்டு, தெரியாததை விலக்குகிறான். இது அறியாமையின் இயலாமை. தெய்வீக ஆன்மா-வுக்கு இயலாமையில்லை. இயலாமை இல்லாத நிலையில் எப்படி ஓர் அம்சத்தை வெளிப்படுத்தி, அதை மட்டும் லீலையாக அனுபவிப்பது?

நமக்கு இயலாமை தெய்வீக ஆன்மாவுக்கு இயல்பான கட்டுப்பாடு. அதனால் ஓர் அம்சத்தை வெளிப்படுத்தி மற்ற எல்லா அம்சங்களையும் பின்னால் இழுத்துப் பிடிக்கும் திறமையுண்டு. நமக்கு ஊரில் வேண்டியவர், வேண்டாதவர் பலருண்டு. பலருடனும் பழகுகிறோம். வேண்டாதவரும் அவர் வீட்டு விசேஷத்திற்கு அழைக்கிறார். அவரிடம் நமக்கு வேண்டாதவற்றை வெளிப்படுத்தாமல், விசேஷத்தில் பழக வேண்டிய முறைப்படி பழகிவிட்டு வந்துவிடுகிறோம். இது நாகரீகம். அப்படிப் பழகமுடியாதவன் நாகரீகமற்றவன், அறியா-மையில் உழல்பவன். அவன் வேண்டாதவர் வீட்டுக்கு அழைத்தாலும் போகமாட்டான். அவர்களை அவன் அழைக்கமாட்டான். அது அநாகரீக அறியாமையின் இயலாமை. எல்லாம் அறிவதும், எல்லாம் முடிவதும், எங்கும் நிறைவதும் தெய்வீக ஆன்மாவில் இப்படித் தங்கு, தடையின்றி செயல்படும்.

தெய்வீக ஆன்மாவின் உறுதி (will) சித்திப்பதுஎனில் தெய்வத்தின் எல்லா வல்லமையும் சித்திப்பதாகும். நமக்கு எது பலஹீனமோ, இயலாமையோ, அது தெய்வீக ஆன்மாவில் இயல்பான கட்டுப்பாடு - இழுத்துப் பிடிப்பதாகும். அன்பும், ஆனந்தமும் தெய்வீக ஆன்மா அனுபவிக்க வேண்டுமானால், தெய்வத்தின் பூரிப்பு வெளிப்படுவதாகும். கடவுள் அன்பு, ஆனந்தமாகும். நம் வாழ்வில் அன்பை மறுப்பது அல்லது ஆனந்தத்தை விலக்குவதுஎன்பது தெய்வீக ஆன்மாவுக்கு சந்தோஷத்தையும், ஆனந்தத்தையும் கட்டுப்படுத்தி, ஓரிரு தெய்வீக உறவுகளை வெளிப்படுத்துவதாகும். தெய்வீக ஆன்மாவின் சிருஷ்டிஎன்பது பரமாத்மாவின் உருவகங்கள் ஆகும். மரணம், அழிவு, வாழ்வின் முடிவுஎன நாமறிவது, அமைதி, கட்டுப்பாட்டுடன் வெளிப்படுவதுஎன தெய்வீக ஆன்மா அறியும். அதை ஆனந்தமாயை சச்சிதானந்தத்தில் சிருஷ்டிப்பதாகும். அதே சமயம்



இந்த ஒருமை தெய்வீக ஆன்மா கடவுளை - அதன் உன்னத பிரம்மத்தை - அனுபவிக்கும் உறவை மறுக்காது. அது பிரிவினையில் ஒருமையை ஆனந்தமயமாக அனுபவிக்கும் உறவு. ஐக்கியத்தின் ஒற்றுமையின் அடிப்படையில் ஏற்பட்ட பிரிவினையின் ஒருமை அது. மனதால் குடும்பத்திலிருந்து பிரியாதவன் தனிக்குடும்பம் வைத்தால் அப்பிரிவினை குடும்பஒற்றுமையை அதிகமாக அனுபவிக்க உதவும். இறைவனின் ஆனந்த ஆலிங்கனம்எனப்படும் உச்சகட்ட உன்னத உறவு அப்படிப்பட்டது.

## பக்கம் 157 / பாரா 13

எந்த நிபந்தனையின்படி இந்த தெய்வீக ஆன்மா உலகில் சித்திக்கும்? அதற்குரிய சுபாவமெது? குணம், செயல், திறன்என்பவை மனிதசுபாவத்தின் கருவிகள். உறவு அனுபவம் தரும். அவை ஜீவனுடைய சக்திமூலமாகச் செயல்படுகின்றன. அச்சக்திகள் குணம், செயல், திறன்என்ற கருவிகளாகத் தங்களை உருவாக்கிக்கொள்-கின்றன. உதாரணமாக மனம் பலவகைப்பட்ட மனோ சக்திகளாக மாறுகிறது. தீர்ப்பு, கவனம், நினைவு, அனுதாபம் போன்றவை அவை. இவை மனோமயபுருஷனுக்குரிய கருவிகள். அதே போல் சத்தியஜீவியத்திற்குரிய கருவிகள் உள்ளன. அவை ஒரு ஜீவாத்மா அடுத்த ஜீவாத்மாவுடன் உறவாட உதவும். அவற்றை சக்தி, திறன், செயல்எனலாம். அவையில்லாவிட்டால் லீலையில்லை. இந்தக் கருவிகள் என்ன என்பதை பின் அத்தியாயங்களில் தெய்வீக வாழ்வை எட்டும் வகைகளைக் கருதும்பொழுது எழுதலாம். தற்சமயம் ஒன்றை மட்டும் குறிக்கலாம். ஏனெனில் நாம் தத்துவம் பேசும் நேரம் இது. மனித சுபாவத்தையும், அதன் சட்டங்களையும் நாம் ஆராயுமிடம் இது. அகந்தை அழிவது அவசியம். அகந்தையும், அது ஏற்படுத்திய பிரிவினையும் உள்ளவரை தெய்வீகவாழ்வில்லை. அவை நம் மரணத்திற்கு வழிகோலும். அதுவே நமக்கு பிறவிப்பயன், பிறவியில் உண்டான கர்மம். தத்துவபாஷையில் நாம் இலட்சியத்தை விட்டு விலகிய பாங்கு அது. சத்தியம், நியாயம், ஆன்மா என்பவை

இலட்சியம். அவற்றை விட்டுவிலகுவது பாவம். பிரம்மம் அறியாமையுள் மூழ்கியது. இது பிரம்மம் மேற்கொண்ட லீலை. அதனால் வேதனை ஏற்பட்டது. மனிதன் இன்று தன் ஆரம்ப நிலைக்கு ஆர்வமாகச் செயல்படுவது அதனால்தான்.

**150/1:** தத்துவரீதியாகக் கடவுளையறிந்தபின் தெய்வீகவாழ்வையடையும் பாதையை அறிய முடியும்.

**151/2:** தெய்வீக ஆன்மாஎன்பது ஒன்றான பலவான பிரம்மத்தின் லீலை.

**151/3:** தெய்வீக ஆன்மா சச்சிதானந்தத்தில் அஞ்ஞானக்கறைபடாமல் ஆனந்தமாக, அனந்தமாக, தூய்மையாக உறைகிறது.

**151/4:** தெய்வீக ஆன்மா பிரம்மத்தை விட்டு அகல்வதில்லை.

**152/5:** பரமாத்மாவிலும், ஜீவாத்மாவிலும் ஒரே சமயத்தில் உறைவது தெய்வீக ஆன்மா.

**153/6:** பிரியும்பொழுதும் ஐக்கியத்தை அது இழப்பதில்லை. சிருஷ்டி அதற்கு எப்பொழுதும் பிரம்மமே.

**154/7:** பிரம்மமே எல்லாம்; எல்லாம் பிரம்மத்துள் உறைகிறது; பிரம்மம் அனைத்துள்ளும் இருக்கிறது.

**154/8:** இவை ஒருமை; பன்மையில் ஒருமை; ஜீவாத்மாவின் தனித்தன்மை.

**155/9:** அக்னியே எல்லாக் கடவுள்களும்; அக்னியில் அனைவரும் சேர்கின்றனர்; அக்னி மற்றவருக்குச் சேவகன்.

**155/10:** அனைத்தையும் தானேயென உணர்வதும், அவருடன் உள்ள தொடர்பை இரண்டறக் கலப்பதாக அறிவதும், அவர் தன்னில் பெறும் ஆனந்தத்தை தம் சொந்த ஆனந்தமாக அனுபவிப்பதும் தெய்வீக ஆன்மா.

**156/11:** ஞானம், உறுதி, ஆனந்தம் நம்முள்ளும் பிறரிலும் மோதும் நிலை தெய்வீக ஆன்மாவுக்கில்லை.

**156/12:** எல்லாம் அறிந்தவன், எல்லாம் வல்லவன், எங்கும் நிறைந்தவனான இறைவனை தெய்வீக ஆன்மா வெளிப்படுத்தும் பொழுது மனித



இயலாமையை தன் இயல்பான கட்டுப்பாடாக்கி வெளிப்படுத்துகிறது.

**157/13:** மனம் சத்தியஜீவிய சக்தி, குணம், திறன் பெற்றால் தெய்வீக ஆன்மாவாகும்.

✡ ஆத்மவிடுதலைக்கு வாழ்வு எதிரிஎன்பது ஆரிய முன்னோர் வழக்கு.

✡ ஆத்மா வளர வாழ்வு அடிப்படைஎன்பது ஸ்ரீ அரவிந்தம்.

✡ *தெளிவு வாழ்வை இறைமயமாக்கும்என்பது மையக்கருத்து.*

✡ அறிவு பெறும் தெளிவு ஆத்மா பெறும் வாழ்வு.

✡ இறைவனின் இயல்பை இகவாழ்வில் அனுபவிப்பது ஸ்ரீ அரவிந்தம்.

✡ அறியாத அகண்டம் புரியாத பிரமிப்பு.

✡ தெளிவான அறிவு திறமான ஆட்சிக்கு வித்து.

✡ உயிரில்லாத உடலில்லை. ஆத்மா இல்லாத வாழ்வில்லை.

✡ ஆத்மாவையடையத் தடையென்ற வாழ்வுக்கு ஆத்மீகநறுமணம் தருவது ஸ்ரீ அரவிந்தம்.

✡ பிரம்மம் பிரிதல்ல. நம்மை பிரம்மமாக அறிவது ஞானம். *பிரம்மமாக வாழ்வது பிரம்மஞானம்.*

✡ தெய்வம் அறியாதது அஞ்ஞானம்.

✡ அறியாமையை அறியாத தெய்வம் ஆத்மாவின்அமிர்தத்தையும் அறியாது.

✡ அறியாமை அனந்தனின் மகுடம்.

✡ ஆத்மாயில்லாத வாழ்வில்லை.

✡ மனிதவாழ்வில் உள்ள அனைத்தும் மாயை சிருஷ்டித்தது.

✡ மாயை சிருஷ்டிக்காத மகிமையில்லை.

✡ ஆத்மாவுக்கும் தெய்வீகம் உண்டு.

✡ அது பிரம்மத்தைவிட்டு அகலாது.

✡ *இறைவனை இடைவிடாது அனுபவிப்பது தெய்வீகவாழ்வு.*

✡ தெய்வீகவாழ்வின் மையம் தெய்வீக ஆத்மா.

✡ *பிரிவின் அனுபவம் பிரம்மானுபவம்.*

- ✡ இறைவனை இணைந்தும், பிரிந்தும் அனுபவிக்கலாம்.
- ✡ இரண்டறக் கலப்பது இழப்பதின் உச்சி.
- ✡ விலகி நிற்பது வினோதமான உணர்ச்சி.
- ✡ இரண்டையும் ஏற்பது இகழ்ச்சி புகழ்ச்சியாவது.
- ✡ வாழ்வுஎன்பது உறவு.
- ✡ *தெய்வத்துடனும், ஆத்மாவுடனும் உறவு கொள்வது தெய்வீகவாழ்வு.*
- ✡ தெய்வீக ஆன்மாவின் இருப்பிடம் சச்சிதானந்த லீலை.
- ✡ ஒளிமயமான அமைதி அதன் அடிப்படை.
- ✡ அமைதியான சச்சிதானந்தம் அசைவை அனுபவிப்பது லீலை.
- ✡ தெய்வீக ஆன்மாவுக்கு ஜீவனும், ஜீவியமும், ஆனந்தமும் உண்டு.
- ✡ முயன்று பெறுவது மூலவன் செயலன்று.
- ✡ இல்லாததைப் பெறுவது சாதனை.
- ✡ இருப்பதை ஏற்பது இயல்பு.
- ✡ தெய்வீக ஆன்மா பிரம்மத்தின் முன்னிலையிலிருப்பது அதன் இயல்பு, முயற்சியால் பெற்றதன்று.
- ✡ அறிவுக்குப் பிரம்மம் தத்துவம்.
- ✡ அறிவு தரும் தத்துவம் அனுபவம் தாராது.
- ✡ ஜீவாத்மா மறந்ததை தெய்வீக ஆன்மா மறக்கவில்லை. *மறக்காதது, மறக்க முடியாதது தருவது மகிமை.*
- ✡ ஒன்று பலவானது சிருஷ்டி.
- ✡ மனம் இரண்டில் ஒன்றை அறியும்.
- ✡ தெய்வீக ஆன்மா இரண்டிலும் காலூன்றி நிற்கும்.
- ✡ நாம் நம்மை மறந்த தெய்வீக ஆன்மா.
- ✡ அனைவரும், அனைத்தும், இரண்டையும் அறிவர்.
- ✡ அறிந்ததை மறந்த பேறு மனம் தந்த பெருவாழ்வு.
- ✡ *அம்சம் பிரியும்; அங்கம் பிரியாது.*



- ✡ அம்சத்தை அங்கமாக அறிவது அஞ்ஞானம்.
- ✡ பிரியாமற் பிரிவது எட்டாத வாழ்வை ஏற்று மகிழ்வது.
- ✡ ஒருமையிற் பன்மை உயர்ந்த நெறி.
- ✡ இறைவன் இருப்பது ஒருமை.
- ✡ இறைவனிலிருப்பது பன்மையில் ஒருமை.
- ✡ இறைவன் அகத்துள் உருவம் பெறுவது ஜீவாத்மா.
- ✡ இவை தெய்வத்துள் வேதம் கண்ட சத்தியம்.
- ✡ அக்னி அனைவரையும் உட்கொண்ட ஆண்டவன்.
- ✡ அக்னியில் அனைத்து தெய்வங்களும் இணைகின்றன.
- ✡ அக்னி அனைவருக்கும் சேவகன்.
- ✡ சிருஷ்டியை பிரம்மமாக அறிவது தெய்வீக ஆன்மா.
- ✡ *பிரம்மம் எந்த ரூபத்திலும் பிரம்மமே.*
- ✡ மேகமும், மழையும், ஊற்றும், வெள்ளமும் தண்ணீரே. உருவம் மாறலாம், உள்ளது மாறாது.
- ✡ மலையும், மடுவும், கடலும், மரமும், மனிதனும் பிரம்மமே. தோற்றம் மாறியதால் பிரம்மம் மாறுவதில்லை, அழிவதில்லை.
- ✡ மாற்றம் மனத்துடையது. மகிமை குறைவதில்லை.
- ✡ அறிவும், செயலும் இணைவது வேகம்.
- ✡ பிணக்கு இயல்பன்று.
- ✡ இணைந்து பெறும் இன்பம் இறைவனின் இயல்பு.
- ✡ எல்லாம் அறிந்தவன், எல்லாம் வல்லவன், எங்கும் நிறைந்தவன் ஒரு நேரம் செய்வது ஒன்றே.
- ✡ மனிதனுக்கு பிரம்மம் ஆத்மா.
- ✡ தெய்வீக ஆத்மாவுக்கு பிரம்மம் இறைவன்.
- ✡ மனிதனுக்கு இயலாமை *இறைவனுக்கு* இயல்பான கட்டுப்பாடு.
- ✡ பிரம்மம் குணமாக வாழ்வில் வெளிப்படும்.

✡ **குணம், செயலாக, தண்மையாகவும் வெளிப்படும்.**

✡ ***குணம் மாறினால் தெய்வீகமணம் வீசும்.***

✡ **வாழ்வு தெய்வீகவாழ்வாக மனித குணம் தெய்வீகஉறவாக வேண்டும்.**

✡ **குணம் உறவில் வெளிப்படும் மணம்.**

✡ **பிரம்மம் ஆனந்தத்தைப் பேரானந்தமாக்க சிருஷ்டித்தது.**

✡ **அறியாமை ஆனந்தத்தின் கருவி.**

✡ ***அறியாமை அறிவைவிட உயர்ந்ததுஎன்ற ஞானம் பிரம்மம் பேரானந்தம் பெறும் ஞானம்*** **-- அதுவே உலகில் பிரம்மஜனனம்.**

✡ **அசைவற்ற பிரம்மம் அசைவை நாடுவது ஜனனம்.**

✡ **பிரம்மத்தின் அசைவு பரிணாமத்தின் அமிர்தம்.**

✡ **அசைவு அனந்தனுக்கு அமிர்த ஊற்று.**

✡ **அசையும் பிரம்மம் அக்ஷரபிரம்மத்தின் முழுமை.**

✡ **முழுமை ஆனந்தத்தின் பெருமை.**

✡ **அனந்தம் பெறும் சுதந்திரம் ஆனந்தம்.**

✡ ***ஆனந்தம் அமிர்தத்தின் முழுமை பெறுவது சிருஷ்டியின் பெருமை.***

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தன்னை அறிந்தால் முன்னேற்றமுண்டு. சமூகத்தை அறிவதால் சமூகத்தில் முன்னேற முடிகிறது. விஞ்ஞான முன்னேற்றம் அல்லது செயல்படும் வகையில் முன்னேற்றம் சமூகத்திற்குரியது. தனி மனிதனுக்குச் சமூகத்தைத் தாண்டிய முன்னேற்றமில்லை.

***மனிதனுக்கு முடிவான முன்னேற்றம் சமூகம் தருவது.***



# இந்தியாவின் ஆன்மீகச்சூழல்

**N.** அசோகன்

பெரிய ஆன்மா பூமியில் பிறக்க வேண்டுமென்றால் அதற்குத் தயாராகும் குடும்பம் பல தலைமுறைகளாக மேலும் மேலும் சிறந்த மேதாவிகளை உருவாக்கிக் கொண்டு வந்து, இறுதியாக ஒரு புத்த பகவான், இயேசுபிரான் மற்றும் கிருஷ்ண பகவான் போன்றவர்கள் பிறக்கும் தகுதியைப் பெறுவதாகக் கருதப்படுகிறது. மகாத்மா காந்தி, நேரு மற்றும் தாகூர் ஆகியவர்கள் பிறந்த குடும்பங்களுக்கும் இது பொருந்தும். அதே சமயத்தில் மகான்களும், மேதைகளும் பிறந்த பிறகு அக்குடும்பம் நாளடைவில் இருந்த இடம் தெரியாமலும் போகும் என்றும் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு நாடும் இப்படி தனக்கேயுரிய பாரம்பரியத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. இந்தப் பாரம்பரியம் அந்நாட்டு மண்ணிலும், சூழலிலும்கூட நிறைந்திருக்கும். இந்தியாவிற்கு வந்த அமெரிக்கர் ஒருவர் தமது விமானம் இந்திய எல்லைக்குள் நுழைந்ததும் தமக்குள் ஒரு பெரிய அமைதி நுழைந்ததாக உணர்ந்தார்.

ஸ்ரீ அரவிந்தரை அவரது பெற்றோர்கள் அவருடைய ஏழாவது வயதில் டார்ஜிலிங் நகரில் இருந்த ஓர் ஆங்கிலப்பள்ளியில் சேர்த்த பொழுது தமக்குள் ஒரு கரிய சூழல் நுழைவதைக் கண்டார். பிறகு இங்கிலாந்தில் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை முடித்துக் கொண்டு, தம்முடைய 21வது வயதில் இந்தியா திரும்பினார். மும்பைத் துறைமுகத்தில் அவர் இறங்கிய பொழுது, இந்திய மண்ணில் அவர் காலடி எடுத்து வைத்ததும் தமக்குள் ஓர் ஆழ்ந்த அமைதி நுழைவதை உணர்ந்தார். அந்த அமைதி கடைசி வரையிலும் அவரை விட்டு விலகாமல் அவருடனேயே இருந்தது.

ஐரோப்பியக் கண்டத்தில் நிறைய விஞ்ஞானிகள் பிறந்து இருப்பதால் அக்கண்டத்தின் சூழல் அறிவுமயமாக உள்ளது.

அமெரிக்க தேசத்தில் தாமஸ் எடிசன் மற்றும் ஹென்றி போர்டு போன்ற கண்டுபிடிப்பாளர்கள் பிறந்திருப்பதால் அந்நாட்டில் வேலை செய்கின்ற சாதாரணக் குடிமகன்கூட பணி இடத்தில் இருக்கின்ற மெஷின்களின் உற்பத்தித் திறனை எப்படி உயர்த்தலாம்என்று யோசிக்கிறான். இந்தியாவின் ஆன்மீகச்சூழல் முனிவர்களையும், ரிஷிகளையும் உற்பத்தி செய்துள்ளது. ஆராய்ச்சி செய்கின்ற அமெரிக்கச் சூழல் ரிஷிகளையோ, ஆன்மீகமயமான இந்தியச்சூழல் ஐரோப்பியர்களைப் போல நிறைய விஞ்ஞானிகளையோ உருவாக்கு-வதில்லை. ஆன்மாவிற்குள் அறிவு அடக்கம்என்பதால் சீனிவாச ராமானுஜம்போன்ற ஒரு மேதை இங்கே பிறந்தார். இந்நூற்றாண்டின் தலைசிறந்த கணிதநிபுணர் அவர்தாம்என்றுகூட பல கணித வல்லுநர்கள் நினைக்கின்றார்கள்.

இந்நேரத்தில் இரண்டு கேள்விகள் எழுகின்றன.

1) இந்த ஆன்மீகமயமான இந்தியச்சூழலை ஐஸ்வர்யத்திற்கு ஏற்ற சூழலாக மாற்றுவதற்குத் தகுந்த மனோபாவங்களை நாம் உருவாக்கிக் கொள்ள முடியுமா?

2) இந்த ஆன்மீகச்சூழலில் மேதாவிகள் மறைந்துள்ளார்களா? ஒரு விழிப்புணர்வு வந்தால் அவர்கள் தலையெடுப்பார்களா?

நாட்டின் பழம்பெருமையை நினைத்துக் கொண்டிருப்பது எதற்கும் உதவாது. இன்றைய வாழ்வுக்குப் பயன்படும் நடைமுறைக் கருத்துகளும், செயல்களுமே அர்த்தம் உள்ளவை. மேதைமைஎன்பது என்ன? எவருக்கும் தோன்றாதது மேதைக்குத் தோன்றும்.

பொதுமக்களுக்கு ஜீவனிருக்கிறதா, உயிர்நாடி விழுந்துவிட்டதா என்றால், leasing company என்ற ஒரு கம்பெனி ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடந்தபொழுது, அதைப் பின்பற்றி 350 கம்பெனிகள் நாட்டில் எழுந்தனஎன்பது மக்களுக்கு உயிர்நாடி துடிப்புடனிருக்கிறது என்று பொருள். 1960இல் ஆங்கில மீடியம் நர்சரிப் பள்ளிகள் வந்தவுடன் புற்றீசல்போல் அப்பள்ளிகள் நாட்டில் பரவின. செயலாற்றும் திறன் இல்லாவிட்டால் இது நடக்காது. புது விஞ்ஞானப் பசுமைப்



புரட்சியைப் பாமர மக்கள் ஏற்று, 10 ஆண்டுகளில் நாட்டின் உணவு உற்பத்தியை இரு மடங்காக்கினர். உலகம் பாராட்டும் அளவில் நாடு இன்றுவரை தேர்தல் நடத்துவதும் அத்தகையதே.

டாட்டா கம்பெனியில் சிறந்த டெக்னிஷியன்கள் கிராமத்துப் பிள்ளைகளாக உள்ளார்கள். அன்று இந்தியா பெற்றிருந்த திறமை, உடல் பெற்ற திறமையாக இருந்தால் அது நசித்துப் போயிருக்கும். அது ஆன்மா பெற்ற திறமைஎன்பதால் உயிருடனிருக்கிறது. சந்தர்ப்பம் வந்தவுடன் மேலெழுகிறது. பாடமுறையை மாற்றியவுடன் 2ஆம் வகுப்புக் குழந்தைகளும் ஜுனியர் ஆங்கிலக் கலைக் களஞ்சியத்தைச் சரளமாகப் படிக்கிறார்கள்எனில், நாட்டில் அன்று ஜீவன் பெற்ற ஆத்மா இன்றும் உயிருடனிருக்கிறது. அது வெளிவரும் வழியை நாம் கல்வியிலும், தொழிலிலும் தரவேண்டும். அப்படிச் செய்தால் சீனுவாச ராமானுஜம் விதிவிலக்காக இல்லாமல் விதியாக மாறும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மரியாதை, பிரியம், நன்றி ஆகியவை உயர்ந்தவை, உண்மை என அறிவோம். ஒரு வரம்புக்குள் அவை உண்மையே. வரம்பு மாறினால் அவையும் மாறும். வரம்பு மாறுவதாலோ, சந்தர்ப்பம் மாறுவதாலோ மாறாத பிரியம், நன்றி அரிது. அப்படிப்பட்டவர்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மரியாதை தவறாமல், பிரியம் குறையாமல், நன்றி மறக்காமல் செயல்படுவார்கள். அத்துடன் இக்குணங்களை அவர்கள் எல்லோரிடமும் - வித்தியாசமின்றி - வெளிப்படுத்துவார்கள்.

***உண்மை, வரம்பு மீறினாலும் உண்மையே.***

## அன்பர் கடிதம்

ஸ்ரீ அன்னைக்கு வணக்கம் செய்து எழுதுவது. நான் முன்பு இரண்டு கடிதம் எழுதினேன். தாங்களும் எனக்கு பிரசாதம் அனுப்பி இருந்தீர்கள். மிகவும் நன்றி. எனக்கு உடல்நிலை சரியில்லாத சமயம், நீங்கள் எழுதியதுபோல், ‘இந்த ஜுரம் வரக்கூடாது’ என்று அன்னையிடம் வேண்டினேன். அதுபோல் 6 மாதம் ஆகியும் ஜுரம் வரவில்லை. எனது உடம்பில் கொப்புளம் அடிக்கடி வரும். அதையும் ஸ்ரீ அன்னையிடம் ‘இந்த கொப்புளம் இனிமேல் வரக்கூடாது’ என்று வேண்டிக்கொண்டேன். அதுபோல் இதுவரை வரவில்லை. எனவே ஸ்ரீ அன்னைக்கு நன்றி கூறினேன். இப்போது என் மனைவி 2வது தடவையாக கர்ப்பமாக உள்ளாள். அவள் வயிற்றுவலிஎன்று அடிக்கடி கூறுகிறாள். எனவே அவளுக்கு வயிற்று வலி மீண்டும் வரக் கூடாது என்று வேண்டினேன். ஆனால் இப்போது சுமாராக உள்ளது. மேலும் வரும் 2-6-2008 அன்று செக்கப் செய்ய வரச் சொல்லி இருக்கிறார்கள். அவளுக்கு எந்தவிதமான நோயும் இல்லைஎன்றும் ரிசல்ட் வரவேண்டும். அதற்கும் ஸ்ரீ அன்னையைத்தான் நம்பி உள்ளேன். எதற்கு எடுத்தாலும் ஸ்ரீ அன்னையை நம்புபவன் நான். எனவே என் குடும்பத்தை எந்தவித நோயும் இல்லாமலும், இருக்கின்ற நோயும் இனிமேல் வரவிடாமலும் ஸ்ரீ அன்னை அருள் செய்து என் குடும்பத்தை காப்பாற்ற வேண்டும். ஸ்ரீ அன்னையின் பாதங்களில் ‘என் குடும்பத்தை ஸ்ரீ அன்னைதான் காப்பாற்ற வேண்டும்’ என்று என் குடும்பத்தை ஸ்ரீ அன்னையிடம் ஒப்படைத்துவிட்டேன். இனிமேல் எல்லாம் அருள்தான், என் குடும்பத்திற்கு அரண்போல் இருக்க வேண்டும். ஸ்ரீ அன்னையுடன் வாரம் ஒரு முறை அழைப்பில் கலந்துகொள்ள வேண்டும்என்றால், ஒரு வாரம் செய்தால் அடுத்த வாரம் தடங்கல் வருகிறது. எனவே அழைப்பில் அன்னையை அழைக்க, ஸ்ரீ அன்னை என்னை அழைக்க, எல்லாம்வல்ல ஸ்ரீ அன்னையே ஆசி வழங்கும்படி வேண்டிக்கொள்கிறேன். மிகவும் நன்றி. தங்களின் ஆசி வேண்டி நிற்கும் ஸ்ரீ அன்னையின் அன்பன் - S. ***சந்துரு, களர் கிராமம்.***

❀ ❀ ❀



## ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**N. அசோகன்**

301. கிரியேடிவ்ஆன பாடம் கற்பிக்கும் முறைகள் குழந்தைகளிடமுள்ள அபார கற்கும் திறனை வெளிக்கொண்டு வருகின்றன. இது பரவியதுஎன்றால் குழந்தை மேதாவிகள் நிறையபேர் உருவாகுவார்கள்என்று எதிர்பார்க்கலாம்.

302. இந்தப் புதிய கற்பிக்கும் முறைகளின் முக்கிய அம்சம் என்னவென்றால் பாடம் படிப்பதில் பிள்ளைகளுக்கு உள்ள ஆர்வத்தைத் தூண்டுவதாகும். ஆர்வத்தின் பேரில் படிக்கும்பொழுது வழக்கத்தைவிட அதிகமாகத் தெரிந்து கொள்கிறார்கள்.

303. ஞாபக சக்தி நமக்கு உதவியாக இருக்கிறது. ஆனால் அபார ஞாபக சக்தியை, அபார அறிவுஎன்று நாம் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது.

304. இந்தியக் கல்வி முறையில் இருக்கின்ற பெரிய குறைபாடென்பது மனப்பாடம் செய்வதற்குக் கொடுக்கின்ற முக்கியத்துவமாகும். மேற்கத்திய கல்வி முறையில் நம் சிந்தனை சக்தியைத் தூண்டும் அளவுக்குக் கற்பிக்கும் முறைகள் வேறுபடுகின்றன.

305. இந்தியப் பள்ளிகளில் ஆசிரியர்கள் அதிகாரத் தோரணையில் பாடம் புகட்டுகிறார்கள். மாணவர்கள் கேள்வி கேட்பது ஆசிரியர்களுக்குப் பிடிப்பதில்லை. ஆனால் நம்முடைய மாணவர்களுக்குச் சொந்த சிந்தனை சக்தி வளர வேண்டுமென்றால் பள்ளிகளில் அதிகாரச் சூழல் மாறி, சுதந்திரச் சூழல் வர வேண்டும்.

306. கல்வித் துறையில் எப்பொழுதும் முன்னேற்றம் போதும்என்று நாம் திருப்திப்பட்டுக்கொள்ள முடியாது. மேலும் மேலும் தெரிந்து கொள்வதற்குத் தொடர்ந்து வாய்ப்புகள் வந்தவண்ணம் இருக்கும்.

307. ஒரு காலத்தில் பள்ளிக்கூடம் நடத்துவது வருமானரீதியாகப் பார்த்தால் லாபமில்லாத வேலையாக கருதப்பட்டது. ஆனால் இப்பொழுது சூழல் மாறிவிட்டது. பள்ளிக்கூடம் நடத்தினால் நிறைய வருமானம் கிடைக்கும் என்று இப்பொழுது தெரிகிறது.

308. பள்ளிக் கட்டணமாக மாதம் ரூ.500/- ரூபாய் செலுத்துவதற்குப் பெற்றோர்கள் முன்வருவதைப் பார்த்தால், பிள்ளைகளின் படிப்பிற்கு அவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்என்பது தெரிகிறது.

309. பழங்காலத்தில் ஆசிரியத் தொழில்என்பது மரியாதைக்குரியதாக இருந்தாலும், வருமானரீதியாக திருப்தி இல்லாத தொழிலாக இருந்தது. இப்பொழுது ஆசிரியர் தொழிலுக்கே சம்பளம் கூடுகிறதுஎன்பது கல்விக்கு மரியாதை உயருகிறதுஎன்பதை காட்டுகிறது.

310. பரம்பரையாகப் படிப்பில் ஊறிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் இப்பொழுதும் படிப்பில் முன்னணியில் இருக்கிறார்கள். இதனால் மற்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள் மனம் தளர வேண்டாம். தம்முடைய பாடம் கற்கும் திறனை அவர்களும் வேகமாக வளர்த்துக்கொண்டார்கள்என்றால், முதன்மை வகுப்பிற்கும் மற்ற வகுப்பிற்கும் தற்போது உள்ள வித்தியாசம் போய்விடும்.

311. கல்வியின் சாராம்சம் அறிவாகும். பட்டங்களும் சான்றிதழ்களும் சின்னங்களேயொழிய, அவையே அறிவாகாது. ஒருவருக்குப் பட்டம் இருப்பதால் மட்டும் அவருக்கு அறிவு இருப்பதாகச் சொல்ல முடியாது. ஒருவர் நல்ல ஆடை உடுத்தி இருக்கிறார்என்பதால்மட்டும் அவர் பணக்காரர்என்று நாம் சொல்ல முடியாது. ஆடை ஏமாற்றுவது போல பட்டமும் ஏமாற்றலாம்.

312. பரிட்சையில் அதிக மார்க் வாங்குவதுஎன்பது புத்திக் கூர்மைக்கு அடையாளம்என்று சொல்ல முடியாது. கேள்விகள் ஞாபக சக்தியைப் பரிசோதிக்கும் வகையில் அமைந்திருந்தால் நிறைய மதிப்பெண் வாங்குவதுஎன்பது நிறைய ஞாபக சக்தியைத்தான் காட்டுகிறதுஎன்று அமையும்.

313. புதிய மற்றும் கிரியேடிவ்ஆன ஆராய்ச்சியை நாம் காண்பது அரிது. ஆராய்ச்சி நிறுவனங்கள் பெரும்பாலும் நிறைய தகவல்களைத்தான் சேகரிக்கின்றன. சிந்தனைஎன்பது தரத்தில் உயர்ந்தது. புலமைஎன்பது அளவை ஒட்டியது. ஒரு சிந்தனையாளர் புலமை உடையவராக இருக்கலாம். ஆனால் புலமை உடையவர் சிந்தனையாளராக அவசியம் இருப்பார்என்று சொல்ல முடியாது.

314. தத்துவ விசாரணையை நெடுங்காலமாக வாழ்க்கைக்கு உதவாத பயனற்ற வேலையாகக் கருதி வந்தார்கள். ஆனால் அண்மையில் காரல்மார்க்ஸ்போன்ற அறிஞர்கள் பொருளாதாரம், அரசியல், சமூகம் என்ற மூன்றையும் இணைத்து உருவாக்கி உள்ள கம்யூனிசக் கொள்கைகள் தத்துவ ஆராய்ச்சியை வாழ்க்கைக்கு மிகவும் சம்பந்தப்பட்டதாக மாற்றிவிட்டன.



315. கடந்த கால ஆன்மீகத்தில் சங்கரர் மற்றும் புத்தர் போன்ற மகான்கள் படைப்பை ஒரு மாயைஎன்று சொல்லி வாழ்க்கையை மிகவும் வறண்டதாக மாற்றினார்கள். ஆனால் ஸ்ரீ அரவிந்தர் வாழ்க்கையும், படைப்பும் இறைவனுடைய வெளிப்பாடுதான் என்று வலியுறுத்தி, வாழ்க்கைக்கு ஒரு புத்துணர்ச்சியை வழங்கியுள்ளார்.

316. பழங்காலத்தில் தத்துவம் மற்றும் இலக்கியத்தில் புலமை பெற்றவர்கள் மட்டுமே படித்தவர்களாக கருதப்பட்டனர். ஆனால் இப்பொழுது விஞ்ஞானம் மற்றும் பொருளாதாரம்கூட வளர்ந்துவிட்டதால், இத்துறையில் உள்ள விஞ்ஞானிகள்கூட அறிவாளிகளாக கருதப்படுகிறார்கள்.

317. விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கும் உண்மைகளை அடிப்படையாக வைத்துதான் கண்டுபிடிப்பாளர்கள் புதிய சாதனங்களை உருவாக்குகிறார்கள். இருந்தாலும் Maxwell மற்றும் Max Plank போன்ற விஞ்ஞானிகளைவிட எடிசன் மற்றும் ரைட் சகோதரர்களைத் தான் மக்களுக்கு அதிகம் தெரிகிறது.

318. பணத்தைச் செலவு செய்யும் பொழுது அது குறைகிறது. ஆனால் அறிவை பகிர்ந்துகொள்ளும் பொழுது அது பெருகுகிறது. பணம் பொருளாக இருப்பதும், அறிவு மானசீகமாக இருப்பதுமே, இவை குறைவதற்கும் பெருகுவதற்கும் காரணம்.

319. உண்மையிலேயே கவித்துவம் பெற்ற கவிஞர்கள் எழுதும் கவிதைகள் தானாகவே கவிதை இலக்கணக் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடுகின்றன. கவிதை இலக்கணத்தைப் படித்துவிட்டு, பின்பு கவிதை எழுதுபவர்கள் சிறந்த கவிஞர்களாக வருவதில்லை.

320. படைப்புத் திறன்என்பது உள்ளெழுச்சி சம்பந்தபட்டது. மானிட அறிவைத் தாண்டிய உயர் நிலைகளிலிருந்து இந்த உள்ளெழுச்சி வருகிறது.

***தொடரும்.....***

❀❀❀

## இம்மாதச் செய்தி

**செல்வம்**

**தூய்மையான ஆன்மீகத்தை**

**நாடி வரும்.**



## தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**51.** அஞ்சியவனை குஞ்சும் விரட்டும்.

✡ **அஞ்சியவனையும் ஆதரிக்கும் அன்னைச் சூழல்.**

**52.** காயாகக் காய்த்துப் பூவாகப் பூத்ததாம்.

✡ **காய்ப்பதன் முன், பூப்பதன் முன், பழுப்பது சமர்ப்பணம்.**

**53.** காரிகை கற்றுக் கவி பாடாதவன்
பேரிகை கொட்டி பிழைப்பது மேல்.
(காரிகை = யாப்பிலக்கண நூல்)

✡ **அன்னைச் சூழலில் மகிழாதவன்,**
**உலகில் மகிழும் இடமில்லை.**

**54.** காய்ந்த மரம் வளைந்து நிற்கும்.
நற்குணம் உடையோர் பணிந்து நிற்பர்.

✡ **அன்பு அமிர்தமாகி, அது அருளாவது**
**அன்னைக்குரிய அடக்கம்.**

**55.** காய்ந்து கெடுத்தது வெயில்,
பெய்து கெடுத்தது மழை.

✡ **காய்ந்தாலும், பெய்தாலும் அன்பர் மகசூல் பெருகும்.**

தொடரும்....

❀ ❀ ❀

## தலைமை

கர்மயோகி

தலைமை வலிமைக்குரியது.

உடலுக்குரியது வலிமை.

மனத்திற்குரிய வலிமை திண்மையெனப்படும்.

செயலுக்குரிய வலிமை திறமையாகும்.

உணர்வுக்குரிய வலிமை பண்பு.

ஆத்மாவின் வலிமை பவித்திரம்.

பண்பு பொறுமையால் முழுமை பெறும்.

✡ தலைமை என்றால் அனைவரையும் ஒரு நேரம் கடந்து செல்வதாகும்.

தலைமைக்குரிய தகுதியான வலிமையின்று அப்பதவியை ½ மணி நேரமும் அடைய முடியாது.

✡ **அதையடையும் வழிகள் அநேகம்.**

**பெற்றதைக் காப்பாற்றும் திறமை பெறும் திறமையினின்று வேறுபட்டது.**

✡ ஒவ்வொரு குணமும் ஒன்றைச் சாதிக்கும்.

விரயத்தைத் தவிர்த்தால் காரியம் கூடிவரும்.

தாமதத்தைத் தவிர்ப்பது காலத்திற்குச் செலுத்தும் கவனம்.

காலம் பணம்.

அவரிடம் பணம் ஏராளமாகக் குவியும்.

Attention is an asset in work.

கவனம் காரியத்தைச் சாதிக்கும்.

கவனத்தால் நாம் கவனிக்கப்படுகிறோம்.

நம் கவனத்தைப் பெற்றவர் நம்மை மறக்கமாட்டார்கள்.



நம் கவனத்தைப் பெற்ற பொருள்களால் நமக்குத் தீங்கு வாராது.

எந்தப் பொருளால் பலன் வேண்டுமானாலும், அதை அதிகமாகக் கவனிக்க வேண்டும்.

எதுவும் தவறலாம், கவனம் தவறாது.

பிறரைக் கவனிப்பவரை உலகம் கவனமாகக் கருதும்.

பிறர் குறையைக் கவனித்தால் கெட்ட பெயர் வரும்.

பிறர் நிறைவைக் கவனித்தால் நல்ல பெயர் வரும்.

நிறையைப் பாராட்டினால், பாராட்டு நிறையும்.

மனிதர்களைக் கவனிப்பதுபோல் பொருள்களையும், விஷயங்களையும் கவனிக்கலாம்.

கவனம் காலத்திற்கும் பலன் தரும், பலன் தந்தபடியிருக்கும்.

✡ இனிமையாக உணர்வது இயல்பன்று.

இனிமையாகப் பேசுவதும் எளிதன்று.

இனிமையாக பேசுபவர் வாழ்வு இனிக்கும்.

இனிமையாக உணர்பவர்க்கு உள்ளும் புறமும் இனிக்கும்.

இனிமையாகப் பேசுபவர்க்குக் கெட்ட பெயர் வந்ததுஎன்ற சரித்திரம் இல்லை.

✡ ஞாபகம் பெரிய சொத்து.

பெயர், நம்பர், தேதி, ஊர், உறவு, செய்தி, நிகழ்ச்சி போன்றவை ஞாபக சக்தியுள்ளவர்க்குத் தவறாமல் நினைவில் எழும்.

ஞாபகம் தலைமையைக் கொடுக்கும் திறனுள்ளது.

தாழ்ந்தவர்க்கு உயர்ந்தவர் மறக்காது. அதுவும் ஞாபக சக்தியாகும்.

சிறிய மனிதனுக்குப் பெரிய நிகழ்ச்சிகள் மறக்காது.

அறிவுடையவருக்குத் தெளிவால் ஞாபகம் வரும்.

ஞாபகம் வருவது வேறு, அதைப் பயன்படுத்துவது வேறு.

பெரிய உள்ளத்திற்குப் பிறர் நல்ல பண்புகள் நினைவு வரும்.

அல்பம் பிறர் குறையை மறக்காது.

ஞாபக சக்தியைக் கண்டால் எதிரி அஞ்சுவான், பயப்படுவான், அடங்குவான், பொய் சொல்லத் தயங்குவான்.

அதனால் ஞாபகம் நமக்கில்லாத வலிமையைத் தரும்.

✡ பிறரைக் கவனிப்பதில் பெரியவரைக் கவனிப்பதும், சிறியவரைக் கவனிப்பதும் வேறு.

பெரியவரைக் கவனித்தால் காரியம் எளிதில் கூடிவரும்.

சிறியவரைக் கவனித்தால், வந்தது நீடிக்கும்.

பிறரைக் கவனிப்பதில் பல அம்சங்களுண்டு.

அவர் தேவையைக் கவனிப்பது, அவர் சுபாவத்தைக் கவனிப்பது, அவர் சந்தோஷத்தைக் கவனிப்பது, அவர் முகம் சுளிப்பதைக் கவனிப்பது எனப் பல்வேறு கவனங்கள் உண்டு.

தேவையைக் கவனித்தால் பலன் பொருளாக வரும்.

சுபாவத்தைக் கவனித்தால் மனிதன் கட்டுப்படுவான்.

சந்தோஷத்தைக் கவனித்தால் அவர் நம்மை நாடுவார்.

முகம் சுளிப்பதைக் கவனித்து விலக்கினால், அவர் எப்பொழுதும் நமக்குக் கட்டுப்படுவார்.

நாம் சரியாக இல்லாத நேரத்திலும் நம்மை ஏற்பார்.

✡ எந்தப் பொருளைக் கவனிக்கிறோமோ, அப்பொருளில் தட்டுப்பாடு வாராது.

எந்த மனிதரைக் கவனிக்கிறோமோ, அவரால் நமக்குக் கெடுதல் வாராது.

✡ திறமைகளைச் சேர்த்தால் சேர்ப்பதற்குரிய பலன் வரும்.

எல்லாத் திறமைகளையும் பெற்றால், பலன் அடுத்த கட்டத்தில் வரும்.

✡ ஒரு சட்டத்தை 99% பின்பற்றினால் பின்பற்றிய அளவுக்கு, பின்பற்றும் இடங்களில் பலன் வரும்.

**100% பின்பற்றினால் பலன் அடுத்த உயர்ந்த கட்டத்திலிருந்து வரும்.**



✡ அன்னையை 99% பின்பற்றினால் வாழ்க்கை வளம் பெறும்.

Results will be proportionate.

100% பின்பற்றினால் யோகம் சித்திக்கும்.

## தலைமையைப் பெறுவது எங்ஙனம்?

✡ நம்மிடம் உள்ள நல்ல குணங்களில் நம் சுபாவத்திற்குப் பொருத்தமான ஒன்றை, தற்சமயம் நாம் முக்கால் பாகம் பின்பற்றுவோம். **அதை முழுமையாக (99% அல்ல 100%) பின்பற்றினால் தலைமைக்குரிய தகுதி கிடைக்கும்**.

குணங்கள் இரு வகைப்படும்.

அவை சிறியவை, பெரியவைஎனப் பிரியும்.

சிறியவை செயலில் திறமையாகும் Skill.

பெரியவை பர்சனாலிட்டியின் திறமையாகும் Capacity.

ஞாபகம், குறித்த நேரத்தில் செயல்படுவது, ஒழுங்கு, சிக்கனம், முறை போன்றவைகளை Skill செயல் திறமை எனப்படும்.

அறிவு, சொல்லைக் காப்பாற்றுவது, முறை தவறாதது, தாராளம், பண்பு, ஆகியவை மேற்சொன்னவற்றிற்குப் பெரியவை Capacity எனலாம்.

100% ஒன்றைப் பின்பற்றினால் பலன் இரண்டிற்கும் உண்டு.

சிறியதற்குரிய பலன் நாம் தேடிப் போவதாக அமையும், நிலையற்றதாக இருக்கும், நீடிப்பதானால் தவறான முறையால் நீடிப்பதாகும், சிறிய இடத்தில் பெரும்பலனாகும்.

பெரியதற்குரிய பலன் நம்மைத் தேடிவரும். வருவது நாமே விலகாமல் விலகாது, ஆயுள்வரை நீடிக்கும், பெரிய இடத்தில் பெறுவதாகும்.

அதிகாரம் பலன் பெறுவது போல் அடக்கமும் பெறும்.

நல்லதற்குரிய பலன் கெட்ட திறமைக்கும் உண்டு.

பலன் இரண்டுக்கும் உண்டு.

நமக்கு வேண்டியது நல்லது.

அன்னைக்குரியது அதிகபட்சம் நல்லது.

அதிகாரம் தேடிப் போவது, அடக்கத்தை நாடி வரும்.

பெரிய இடத்துப் பிரச்சினைகள் சிறிய இடத்திலும் உண்டு.

எல்லாப் பிரச்சினைகளையும் சிறிய இடத்தில் தீர்ப்பவனுக்குப் பெரிய இடத்துத் தலைமையுண்டு.

**பிரச்சினையைத் தீர்ப்பவன் தலைமையை நாடினால் கிடைக்கும்.**

**வாய்ப்பை *ஒன்று தவறாது* பெற்று அனுபவிப்பவனுக்குத் தலைமை எளியதாகக் கிடைக்கும்.**

பிறருக்கு வாய்ப்பை உற்பத்தி செய்தால் வாழ்க்கை அவருக்கு வாய்ப்பை உற்பத்தி செய்யும்.

இல்லாத வாய்ப்பைப் பிறருக்கு உற்பத்தி செய்தால், இதுவரையில்லாத வாய்ப்பு நமக்கு உற்பத்தியாகும்.

எவரும் தீர்க்கக்கூடிய பிரச்சினையைப் பிறருக்குத் தீர்க்கலாம்.

எவருக்கும் உள்ள வாய்ப்பு நமக்கு வரும்.

எவரும் தீர்க்க முடியாத பிரச்சினையை ஒருவருக்குத் தீர்த்தால் எவருக்கும் இல்லாத வாய்ப்பு தீர்த்தவருக்கு எழும்.

உலகில் தீர்வில்லாத பிரச்சினையை ஒருவருக்குத் தீர்ப்பவர்க்கு உலக அரங்கில் பதவி வரும்.

பிறர் அல்ப ஆசைகளைப் பூர்த்தி செய்தால், செய்தவருக்குப் பெரிய ஆசைகள் பூர்த்தியாகும்.

இவை பரநலமான சுபாவம் உடையவர் செய்யக்கூடியன.

தலைமையை நாடுபவர் திறமையைப் பெற்றால் தகுதி எழும்.

தகுதி பெற்றால் வாய்ப்பு எழும்.

தகுதி எழுமுன் வரும் வாய்ப்பை ஏற்றால் நீடிக்காது.

வாய்ப்பு தகுதியைவிட எளிமையாகப் பெறக்கூடியது.

**எதுவும் அன்னையிடம் ஒருபடி அதிகமாக, சீக்கிரம் பலிக்கும்.**

பலிக்கும் என எதிர்பார்த்தால் தள்ளிப் போகும்.

அனைவரும் பெறலாம், சிலருக்கே நீடிக்கும்.



## பெற்றது நீடிக்க என்ன செய்ய வேண்டும்?

✡ முறையாகப் பெற்றது முயற்சியின்றி நீடிக்கும்.

தவறாகப் பெற்றது திறமையால் வந்தது, தகுதியாலில்லை. அதனால் நீடிக்காது.

இயல்பான திறமையால் பெற்றது நம்மை விட்டு அகலாது.

(Complex) தாழ்வு மனப்பான்மைக்குரிய திறமை பெற்றது நீடிக்காது.

ஒரு பெரிய திறமையால் பெற்றால், அதற்கெதிரான குறை தீவிரமாக இருக்கும்.

திறமை பெற்றுத் தரும். குறை பெற்றதை விலக்கும்.

குறையை நிறைவாக்குவது திருவுருமாற்றம்.

எதிரான குறை விலகினால் வந்த செல்வமோ, பதவியோ விலகாது.

காலத்திற்குரியது கிடைத்தால், காலம் மாறும்பொழுது அதுவும் மாறும்.

குணத்தின் பக்குவத்திற்கு வந்தது நாமே விலகும்வரை அழியாது.

பெற்றது நீடிக்குமாறு செய்ய, வருவதை ஏற்க, தகுதி வரும்வரைக் காத்திருக்க வேண்டும்.

கெட்டதை விலக்கி, நல்லதை நாட வேண்டும்.

நல்லவற்றுள் உயர்ந்ததைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நம்மால் தொடர்ந்து காப்பாற்ற முடியாதவற்றைத் தவிர்க்க வேண்டும்.

அவசரம் விலகி, நிதானம் பெற வேண்டும்.

பிரார்த்தனை பலிக்கும்.

பதவிக்காக, தலைமைக்காகப் பிரார்த்திக்காமலிருப்பது நல்லது.

தேடினால் கிடைக்கும்.

தேடாமலிருப்பது உயர்ந்தது.

மனம் நாடினால் நிச்சயமாகக் கிடைக்கும்.

மனம் தலைமையை நாடாமலிருப்பது நல்லது.

அன்னையைக் கேட்டால் கிடைக்கும்.

அன்னையிடம் இதையும் கேட்காமலிருப்பது நல்லது.

அதிகாரமும், அதிர்ஷ்டமும் சாதிக்காததை அடக்கம் சாதிக்கும்.

தலைமைஎன்பது தகுதி.

தகுதி பிறப்பிலும் வரும், முயன்றும் பெறலாம்.

தலைமையைப் பெறும் முறை எதையும் பெறும் முறையே தவிர புதியதன்று.

புறத்தில் பெற உழைப்பும் முயற்சியும் வேண்டும்.

**அகத்தில் பெற அமைதியும், அடக்கமும் தேவை.**

தலைமை எங்கும் உண்டு - வீடு, ஆபீஸ், ஊர், நாடு, உலகம்.

வீட்டில் தலைமையுள்ளவனுக்கு வெளியிலும் கிடைக்கும் வாய்ப்புண்டு.

வீட்டில் அன்பால் பெற்ற தலைமை வெளியிலிருந்து தேடி வரும்.

சுதந்திரமான சூழல் பெருந்தலைமைக்கு அடிப்படை.

சுதந்திரம் அமைதிக்கு அதிகாரம் தரும்.

அமைதி பெறும் அதிகாரம் அனந்தம்.

பண்பு தரும் தலைமை பவித்திரமானது.

திறமை தரும் தலைமை காரியத்தை முடிக்கும்.

பண்பு தரும் தலைமை பதவியை நீடிக்கும்.

பண்பு, அமைதி, அன்பு, திறமை ஆகிய அனைத்தும் சத்தியத்தின் பகுதிகள்.

சத்திய சீலனை உலகம் ஒதுக்கும், தலைமை தாராது.

சத்தியத்திற்கும் பதவிக்கும் பகை.

சத்தியம் தலைமை பெறுமானால், உலகம் உள்ளடங்கி ஏற்கும்.

பொய்யான உலகம் சத்தியத்தை வெறுப்பது உண்மை.

ஆனால் அது சத்தியத்தை ஏற்றால், போற்றிப் பாராட்டும்.

அன்னை சத்தியத்தைக் கடந்தவர்.

அன்னை சத்தியம் ஆண்டவன் சத்தியம்.



தலைமையும், பதவியும் அதைத் தேடி வரும்.

வருவது பெரிதன்று, ஏற்பது பெரியது.

ஏற்பதைவிட நீடிப்பது பெரியது. அது அடக்கத்திற்குரியது.

## தலைமையின் அவசியம்

உடலுக்கு உணவு அவசியம் என்பதைப் போல் உழைப்பும் அவசியம்.

உழைப்பு உடலை ஆனந்தப்படுத்துகிறது.

மனம் கலையை நாடுகிறது.

இசையை அனுபவிக்காதவரில்லை.

விலங்கும், விஷ ஜந்தும் இசைக்குரிய இனிமையையறியும்.

**அதுபோல மனிதனுக்குப் பணிய அவா.**

**அதிகாரம் செய்யும் ஆசை பணியும் ஆசையின் மறுபுறம்.**

மனிதன் தலைவனைத் தேடுகிறான்.

அவன் தேடுவது இறைவனை.

இறைவனை உலகில் தலைவனாக மனிதன் காண்கிறான்.

மனித ஆத்மா பணிவதில் நிறைவடைகிறது.

இது உலகஇயற்கையில் ஆன்மீகவெளிப்பாடு.

பெண் ஆணுக்கு அடங்குவதில் பெருநிறைவு பெறுகிறாள்.

இது மனிதசுபாவம்.

இதைக் கடக்காமல் பெண் யோகம் செய்ய முடியாதுஎன்று அன்னை கூறுகிறார்.

ஆண் அடிமையை விழைகிறான்.

பெண்ணுக்கு மனதால் அடிமைப்பட ஆண்மை ஏங்குகிறது.

அதுவே காதல் இரகஸ்யம்.

இது ஆன்மீகம் ஆண்மையில் பூரணம் பெறுமிடம்.

மனிதவாழ்வு தலைவனுக்குத் தலை வணங்குவதில் பூர்த்தியாகிறது.

இதுவே தலைமையின் தத்துவம்.

பெரியதை, சிறியது நாடுவது பெருமை.

இது இயற்கையின் இயல்பு.

தலைமை தாங்குவதும், விழைந்து பணிவதும் உறவின் இரு முகங்கள்.

பணிவதின் இனிமையை அறிந்தவன் பணிவைப் பெறுவான்.

அது இயல்பான தலைமை.

**பணிவு பூர்த்தியானால் தலைமை மலரும்.**

புறத்தில் பணிவது செயலுக்குரியது.

அகத்தில் பணிவது ஆன்மாவுக்குரியது.

அகப் பணிவு, புறத் தலைமையின் பூரணம்.

பெண்மைக்கு அன்பால் அடிமையாவது ஆண்மைக்குப் புறத்தில் உலகின் அன்பை அமைதியாகப் பெற்றுத் தரும்.

ஆண்மை தலைமையில் பூர்த்தியாகும்.

ஆண்மை ஆன்மீகத்தில் பூர்த்தியாவது அக வாழ்வில்.

சிறியதற்குப் பணிவது பெரியதின் பெருமை.

**அகத்தில் பூர்த்தியான ஆண்மைக்கு அகிலம் உரியது.**

இது வேதம் கண்ட உண்மை.

வாக்காளரைப் பெருமக்களாக்கியது மக்களாட்சி.

மனதால் மனிதனைப் பணிபவன் மன்னனாகிறான்.

மக்கள் நலம் மக்களாட்சியின் இரகஸ்யம்.

மனநலம் மக்கள் நலம்.

மக்கள் மன மகிழ்வது மக்களாட்சி மலர்வது.

மனம் மக்களை நாடினால், உலகம் அவன் தலைமையை நாடும்.

இருப்பதை அனுபவிப்பது வாழ்வு.

இல்லாததை உற்பத்தி செய்து அனுபவிப்பது அன்னை வாழ்வு.

அன்னை அனைவர் மனத்திலும் மகிழ்ச்சியாக உறைகிறார்.



ஆண்மையின் தலைமை ஆன்மீகப் பெண்மையை - அன்னையை - மக்கள் மனத்தில் நாடுவதாகும்.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இறைவனைப் பெண்ணாகவும், தானே பெண்ணாக மாறி இறைவனைக் காந்தனாகவும் வரிப்பதே ஆன்மீக அனுபவத்தின் உச்சகட்டம் என்கிறார்.

ஆத்மா இறைவனையடைவது மோட்சம், விடுதலை, அனுபவம் இல்லை. சக்திக்குச் சரணடையும் மனிதன் தன்னுள் புதைந்துள்ள ஆன்மீகபலத்தைக் கண்டு, ஆன்மீக அனுபவத்தைப் பெறுகிறான். முடிவில் உலகத்தை அற்புதக் காட்சியாகக் காண்கிறான்.

மனிதன் தன்னைப் பெண்ணாகக் காண்பது, பிரகிருதியின் சரணாகதி, அதுவே பூரணயோக முடிவு. அது அனுபவத்தின் தீவிரத்தை அதிகப்படுத்துகிறது. அத்துடன் evolution பரிணாமத்தைப் பூர்த்தி செய்கிறது.

✡ ***பெண்மையின் இன்பமே உயர்ந்த ஆன்மீகஇன்பம்.***

✡ ***சக்திக்கு சரணடைந்தால் உலகம் அற்புதமாகும்.***

✡ ***இறைவனுக்கு, தான் பெண்ணாகும் மனிதன் பூரண யோகத்தைப் பூரணமாக்குகிறான்.***

**P.89 Then glad of a glory of multitudinous mind.**

**பலதரப்பட்ட மனத்தின் மகிமையில் மனம் மகிழ்ந்தது.**

✡ வாழ்வின் ஆனந்தம் தைரிய வீச்சால் மலர்ந்தது.
✡ ஜடத்தின் ரூபவண்ணம் செறிந்து அழகாயிற்று.
✡ காலத்தின் கதியினின்று அழியாத பிரம்மத்துள் நுழைந்தது.
✡ பொன்னான ஏணியால் ஆத்மாவை ஏந்திச் சென்றது.
✡ ஆத்மாவின் தூரத்து முனைகளை வைர இழையால் இணைத்து,
✡ இது ஜீவியம் ஜீவியமாக மாறுவது.
✡ சூட்சும ஜட இருளின் சக்தியின் துணை பெற்ற செயல்.
✡ அவசியமான அஞ்ஞானத்தின் அனந்தமான ஊற்று.
✡ உயிரளிக்கும் எல்லைக்குரிய கட்டிட மேஸ்த்திரி.
✡ ஜீவியம் எழுந்து ஜீவியத்தை நோக்கிச் செல்லும்.
✡ மூலத்தை நோக்கி முயன்றெழுந்து,
✡ அது மூலம், உள்ளதனைத்தின் மூலம் அது.
✡ மூலமே முடிவாகும், பூலோகமே சொர்க்கமாகும்.
✡ பெரியதடங்கி சிறியதாகச் செயல்படும் பிரம்மம்.
✡ அமைதியிலடங்கி, ஒடுங்கி, எழுந்துயர்ந்த உச்சியெனும் சிகரம்.
✡ அற்புதம் ஆச்சரியமாக விரியும் அதிசயம் போடும் நடை.
✡ விதிக்கப்பட்ட அரங்கம் விதிமதியாகும் பாதை.
✡ மலரும் ஆத்மாவின் வளரும் பாங்கு வகுக்கும் கட்டம்.



✡ சத்திற்கு அதன் வித்தை விளக்கும் வினோதம்.
✡ உச்சியையும் உளவறியும் ஆழத்தையும் ஒன்று சேர்க்கும் அசைவு.
✡ திரையிட்ட எதிரானதை ஏற்க வைக்கும் ஏற்றம்.
✡ சொல்லழிந்த அமைதியுடன் சிருஷ்டி இணையும் நேரம்.
✡ லோகங்கள் சேர்ந்த பெருலோகம்.
✡ இரவு இல்லை, தூக்கம் துறவறம் பூண்டது என்ற மலையின் மகுடம்.
✡ உயர்ந்த திரிமூர்த்திகளின் ஒன்று சேரும் ஒளி.
✡ இங்கு தேடுவதை அங்கு கண்ட திறன்.
✡ கடுகை அவிழ்த்துக் கடலெனப் பெருக்கி,
✡ சொந்த பிரம்மத்தின் சொர்க்க வாயிலைக் கடந்து,
✡ இருண்ட ஜடம் இறைவனின் இதயத்தைத் தன்னுள் கண்டு,
✡ மடமையில் மகிழும் எண்ணமும், எழுச்சியும்,
✡ சத்தியம் பெற்ற உடலை சத்தென சிக்கெனப் பிடித்து,
✡ ஜடத்தின் மௌனம் ஜனித்த சங்கீதம்.
✡ அனைத்துமழிந்த ஆழத்தில் பறித்த புது வண்ணம்.
✡ பெற்றதைப் போற்றி, பேச வாயெழாமல்,
✡ சுவர்க்கத்தின் ஸ்ருதி கனவென எழுந்து, கலைந்து,

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சாக்ரடீஸும், நியூட்டனும் ஆழத்தைச் சேர்ந்தவர்கள். இன்றும் அவர்கள் சொல்லியதை உலகம், முழுவதும் அறியப் பாடுபடுகிறது.

*ஆழத்தில் பிறந்த அறிஞர்கள்.*

# முன்னேற்றம் தரக்கூடிய சாதனை

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

## SURRENDER & FAITH:
## சரணாகதி, நம்பிக்கை, சமர்ப்பணம்

நம்பிக்கை, தெய்வ நம்பிக்கைஎன இரண்டாகப் பிரிக்கலாம். நம்பிக்கை (faith) என்பது ஆன்மாவிற்குரியதுஎன்று அன்னை கூறியிருக்கிறார்கள். நம்பிக்கை உள்ளவர் ஆன்மவிழிப்பு உள்ளவர். மனத்தால் முடியாதுஎன்பது ஆன்மாவிற்கு முடியும்என்பது உண்மை. நம்பிக்கை நம் வாழ்வில் முழுமையாகச் செயல்பட வேண்டுமானால் சமர்ப்பணம் அதற்குத் துணையாக நிற்க வேண்டும். கண்ணுக்குத் தெரியாததை நம்புவதே நம்பிக்கை. நம் மனம் நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகள், நம் திறமை, நம் அறிவிற்கு எட்டியது போன்றவற்றைக் கணக்கில்கொண்டு ஒரு செயலை, விஷயத்தை எடை போடுகிறது. அவ்வாறு பகுத்துப் பார்க்கும்பொழுது இது ஒரு hopeless situation, காரியம் கைகூடாதுஎன்று முடிவிற்கு வருகிறது. அதையே நம்புகிறது. அன்னை மீது நம்பிக்கை இருக்கிறது என்பவரும், தன்னை அன்னையிடம் ஒப்படைத்துவிட்டேன் என்பவரும் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் தன்னை சோதனை செய்து பார்த்தால், இந்த விஷயத்தில் நம்பிக்கை, குறைவாக இருப்பது தெரியும். டாக்டர் இந்த வியாதி குணமாவது கடினம்என்று கூறினால், மனம் அதைத் திரும்பத் திரும்ப நினைக்கிறது, நம்புகிறது. வாய், 'அன்னை இருக்கிறார்' என்று கூறினாலும், உணர்வு, டாக்டர் சொல்லை நம்புகிறது. இதை எல்லாம் மீறி, உண்மையாக அன்னை மீது, அவர் சக்தி மீது நம்பிக்கை வைத்து, 'டாக்டர் சொல்வது is a medical fact. ஆனால் அன்னை அதற்கெல்லாம் அப்பாற்பட்டவர், அன்னை சக்தி சத்தியஜீவிய சக்தி, எதையும் சாதிக்கும் சக்தி' என்று உணர்ந்தால், நடப்பது Medical Miracle.

நம்பிக்கை உள்ளவர்க்கு அபாரப் பொறுமை உண்டு. அவசரப்படுபவர்கள் நம்பிக்கை இல்லாதவர்கள். பொறுமையாக, எதுவும் நம்மை disturb செய்யாமல் காத்திருப்பதும், யோசனை செய்யாமல் க்ஷணத்தில் ஏற்பதும் நம்பிக்கையின் ஆன்மீக இலட்சணங்களாகும். ஆர்வமாக நம்பிக்கையால் செயல்படுபவர், தம்மை அன்னையிடம் ஒப்படைப்பவர், அன்னை மீது நம்பிக்கை உள்ளவர் என்றும் கூறலாம்.

நம்பிக்கையும், சமர்ப்பணமும் நெருங்கிய தொடர்புடையவை. சமர்ப்பணம் உயர்ந்தால் நம்பிக்கை உயரும். நம்பிக்கை உயர்ந்தால், அசைக்க முடியாததானால், சமர்ப்பணம் பூர்த்தியாகும். காரியம் சமர்ப்பணம் ஆகவில்லை, விஷயம் முடியவில்லை என்றால், நம்பிக்கை குறைவாக இருக்கிறதுஎன்று உணர வேண்டும். அன்னையிடம் நம்பிக்கையை உயர்த்த வேண்டும். நம்பிக்கைக்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

நாம்என்பது நம் திறமை. நாம் நம் திறமை மூலமாகமட்டும் முன்னேற முயல்கிறோம். அது சிறிய முன்னேற்றம். நம் திறமைக்கும், personalityக்கும் தகுந்தாற்போல்தான் ரிசல்ட்டும் இருக்கும். இதுதான் நம் வாழ்வின் சட்டம். அன்னைச் சட்டம் வேறு. திறமைப் பேரருளுக்குத் தடை. நம் திறமையை நம்பாவிட்டால் அருள் பேரருளாகிறது. நாம் சிறிது சிந்தித்துப் பார்த்தால், யோசனை செய்து பார்த்தால், நாம் திறமையால் சாதித்தவைஎன்று உணர்ந்த அனைத்தும் நம் திறமையை மீறிச் சாதித்தவையாகும்என்று அறிய முடியும். வாழ்வில் அதிகமாகச் சாதிக்க விரும்புபவன் திறமையை நம்பாமல் ஆன்மாவை, அன்னையை நம்ப வேண்டும். திறமையால் சாதிப்பது கை மண் அளவு; அன்னை கொடுப்பது உலகளவுஎன்ற தெளிவு வேண்டும். அதற்குரிய கருவி, சமர்ப்பணம். ஒரு காரியத்தைச் சமர்ப்பணம் அற்புதமாக்கும்.

அகந்தை மூலமாக நாம் செயல்படும் பொழுது result சிறியது, நம் வளர்ச்சியைத் தடை செய்வது. அன்னைஎன்பது அகந்தையை கடந்த நிலை. "நாம்" இருக்கும் வரை அன்னைசக்தி அபரிமிதமாகச் செயல்பட முடியாது. நாம் அழிந்தபின், நம் வாழ்வு அன்னைபிடிக்குள் வருகிறது. அப்படிப்பட்ட வாழ்வு, அற்புதம் அன்றாட நிகழ்ச்சியாகும் வாழ்வு. அப்படி வாழ்வதற்கு அஸ்திவாரம் faith & surrender.

சுருக்கமாகச் சொன்னால், அன்னை அன்பர்களால் வாழ்வில் சாதிக்க முடியும், வருமானத்தைப் பல மடங்கு பெருக்க முடியும். அதற்குரிய பாதை, சாதனைக்குரிய முக்கியப் பண்புகளை நம் வாழ்வில் கடைப்பிடிப்பதாகும். சாதனையை விரைவுபடுத்தும் பண்புகள் பல இருந்தாலும் இந்தச் சொற்பொழிவில் நாம் முக்கியமாக, அத்தியாவசியமானதுஎன்று எடுத்துக்கொண்டது 10 பண்புகள் மட்டும்தான். அவைகளை மீண்டும் ஒரு முறை கூறுகிறேன்.

1. **கடின உழைப்பு (Hard work).**
2. **அறிவு மற்றும் திறமை (Intelligence & skill).**
3. **துணிச்சல் (Risk taking).**
4. **விடாமுயற்சி, நிதானம் (Endurance).**
5. **தைரியம் (Courage).**
6. **சமயோசித புத்தி (Resourcefulness).**
7. **ஆர்வம் (Ambition & aspiration).**
8. **முறைப்படுத்துதல் (Organisation).**
9. **சுமுகம் (Harmony).**
10. **ஏற்புத்திறன் (Receptivity).**

**எல்லாவற்றிற்கும் மேலாக Surrender and Faith in Mother.**

*முற்றும்*

❀ ❀ ❀



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**928) ஒரு புது விஷயத்தை நமக்கு ஏற்கனவே தெரிந்ததைக் கொண்டு புரிந்துகொள்வது அறிவு. புது விஷயத்தை அதன் கோணத்தில் புரிந்துகொள்வது சிந்தனையாகும்.**

***உள்ளதை உள்ளபடி அறிவது சிந்தனை.***

பாங்க் லோன் கொடுக்கிறது. பெறுபவர் வட்டிக் கடையை அறிவார். வட்டிக்காக பாங்க் லோன் கொடுக்கிறதுஎன்பது அறிவு. நாடு முன்னேற சர்க்கார் பாங்க் மூலம் ஏழைகட்கு ஈடு இல்லாமல் பணம் கொடுத்து, ஏழ்மையை விலக்க முயல்கிறதுஎன்பது சிந்தனையால் தெரிந்துகொள்வது.

✡ அறிவு நமது அனுபவம் (Subjective) -- அகம்.

✡ சிந்தனை உள்ளதை அறிவது (Objective) -- புறம்.

பயங்கரவாதிகள் தங்கள் மதத்தைப் பரப்ப எதிரியைத் தாக்கு-கிறார்கள்என்பது அறிவு.

நாட்டில் ஏழ்மை மலிந்துள்ளதால், படித்த இளைஞர் வேலையில்லாமல் இருப்பதால், பயங்கரவாதத்தில் ஈடுபடுகிறார்கள்என்பது ஆராய்ச்சி மூலம் கண்டறிவது -- சிந்தனை.

மேல்நாட்டார் வேவு பார்க்க இந்தியாவுக்கு வருகின்றனர்என்பது மனிதன் தனக்குத் தெரிந்ததன் மூலம் தெரியாததை அறிவது -- அறிவுஎனப்படும்.

ஆன்மீகத்தை நாடி இளைஞர்கள் இந்தியா வருகின்றனர்என்பது சிந்தனையின் தெளிவு.

கல்லூரி நடத்துவது இலாபகரமானதுஎன்பதால் கல்லூரிகள் பரவுகின்றன -- அறிவு.

சுதந்திரம் வந்தபின் நாடு சுபிட்சம் பெற அறிவை நாடுவதால் கல்லூரிகள் ஏராளமாக ஏற்படுகின்றன -- சிந்தனையின் முடிவு.

மேல்நாட்டார் மார்க்கட் தேடி இந்தியா, சைனா வருகின்றனர் -- அறிவு.

மனித குலம் ஒன்றுபட வியாபாரம் மூலம் முயல்கிறது -- சிந்தனை.

சர்க்கரை சாப்பிடுவதால் சர்க்கரை வியாதி வருகிறது -- அறிவு.

உடலால் சர்க்கரையை ஜீரணம் செய்ய முடியாத பொழுது வரும் வியாதிக்கு நீரிழிவு, சர்க்கரை வியாதிஎனப் பெயர் -- சிந்தனை.

அரசியல் கட்சிகள் போட்டியால் பத்திரிகைகள் வளர்கின்றன -- அறிவு.

கல்வி பரவுவதால், மக்கள் படிக்க ஆர்வத்தால் பத்திரிகைகள் வளர்கின்றன -- சிந்தனை.

ஜனத்தொகை பெருகுவதால் நீர்ப்பஞ்சம் ஏற்படுகிறது -- அறிவு.

நாகரீகம் உணர்ச்சியை வறட்சியாக்கியதால் தண்ணீர்ப்பஞ்சம் ஏற்படுகிறது -- சிந்தனை.

நான் உதவ முடியாததால் என் நண்பன் எதிரியாகிவிட்டான் -- அறிவு.

உதவி பெற்றதால் தாழ்வு மனப்பான்மை அவனை எதிரியாக்கிவிட்டது -- சிந்தனை.

பக்தியால் நாம் அன்னையை நாடி வருகிறோம் -- அறிவு.

அன்னை நம்மை நினைப்பதால் நாம் அன்னையை நாடி வருகிறோம் -- சிந்தனை.

❀ ❀ ❀



**929) ஆண், பெண் கவர்ச்சி இயற்கைக்குரியது. மனைவி தன்னைப் பாராட்டி அன்பு செலுத்துவாள்என்பது உணர்வு. மனைவியின் ஆன்மாவுடன் கணவன் ஆன்மா கலப்பது ஆன்மீகம்.**

***கவர்ச்சி இயற்கை; அன்பு உணர்ச்சி; ஆன்மா இரண்டறக் கலக்கும்.***

சேவல், பெட்டைஎன ஆண், பெண் கோழியைக் கூறுகிறோம்.

பெண் என்ற சொல் விலங்கினத்திற்குரியதன்று, மனித குலத்திற்குரியது.

மனைவிஎன்பது குடும்பத்தில் கணவனை ஏற்றுக்கொண்ட பெண்ணுக்குரியது.

ஆன்மீகஅம்சம் பெற்ற மனைவி, சக்தியாகிறாள்.

**பெட்டை, பெண், மனைவி, சக்தி என்பவை பெண் உயரும் பாதை.**

**காளை, ஆண், புருஷன், ஈஸ்வரன் என்பவை அதே நிலைகளைக் குறிக்கும் ஆணுக்குரிய சொற்கள்.**

✡ கவர்ச்சி உணர்ச்சியாவது விலங்கு மனிதனாவது.

✡ மனிதன் தெய்வமாக புருஷன் ஈஸ்வரனாகவும், மனைவி சக்தியுமாக வேண்டும்.

✡ திருமணமாகி, பிள்ளை பெற்று, குடும்பம் நடத்துவது ஆண், பெண்ணுக்கு உரிய முதல் நிலை.

✡ திருமணத்தில் கவர்ச்சியான இளமை மாறி, பொறுப்பால் பண்பு எழுந்து, அப்பண்பு மனைவி மீது அன்பாகும் பொழுது ஆண்மகன் புருஷன்என்ற தகுதி பெறுகிறான்.

✡ ஆண்மகனுக்குரியது ஆண்மை.

ஆண்மைஎன்பது வீரம்; மனைவியையும், குடும்பத்தையும் பாதுகாக்கும் தைரியம்.

போரில் வீரமாக எதிரியை அழிப்பது தைரியமாக ஆண்மை செயல்படுவது.

வாழ்வில் வீரம்என்பது மரியாதை, கட்டுப்பாட்டால் எழும் கண்ணியமான அந்தஸ்து.

தன் மரியாதையையும், தன் குடும்ப அந்தஸ்தையும் காப்பாற்றுபவன் ஆண்மகன், புருஷன்.

வாழ்வில் மரியாதை தருவது வருமானம்.

பொருள் ஈட்டுபவன் வீரமான ஆண்மகன், புருஷனாக அதன் மூலம் மாறுகிறான்.

மனைவி வசதியாகவும், மக்கள் கல்வி பெற்று உயரவும் தகுதி பெற்ற புருஷன் வீரமானவன்.

❀ வாழ்வில் வீரம்என்பது கண்ணியம்.

கண்ணியம் கட்டுப்பாட்டால் வருகிறது.

❀ ஆணுக்குரிய கண்ணியம், இலட்சியமான திறமை தரும் வருமானம்.

❀ பெண்ணுக்குரிய கட்டுப்பாடு குடும்ப கண்ணியத்தைக் காப்பாற்றுவது.

❀ குடும்பத்தின் மீதுள்ள பொறுப்பு பாசமாவது கட்டுப்பாடு.

❀ ஆணுக்கும், பெண்ணுக்கும் அக்கட்டுப்பாடு முழுமையாக உண்டு.

❀ புருஷன் தரும் அந்தஸ்து பெண்ணுக்குரியது.

மனைவியின் அன்பு புருஷனுடைய அந்தஸ்து.

மனம் தரும் மரியாதை அந்தஸ்து, அன்பாகும்.

மனைவியை மனதால் போற்றும் கணவன் அந்தஸ்து உயர்ந்தபடி இருக்கும்.

கணவனை மனதால் பாராட்டும் மனைவி சுமங்கலி, சுபிட்சத்தின் உற்பத்தி ஸ்தானம்.

❀ கணவன், மனைவி அன்னையை ஏற்பதால் ஆன்மாவில் இணைகிறார்கள்.



❀ கணவன், மனைவி நிலை யோகத்தில் ஈஸ்வர சக்தியாக உயரும்.

❀❀❀

**930) பல்வேறு புருஷர்கள் - அன்னமயபுருஷன், பிராணமய புருஷன், மனோமயபுருஷன் - அவற்றின் பிரகிருதிக்கு உட்பட்டுள்ளார்கள். புருஷ - பிரகிருதிக்கு உள்ள தொடர்பால் இது சாத்தியமாகிறது. பிராணனில் ஆசையும், மனத்தில் அகந்தையும், புருஷனை பிரகிருதி ஆளப் பயன்படுகிறது. இத்தொடர்பை அறுத்தால் புருஷனுக்கு விடுதலை; கரைத்தால் புருஷனுக்குப் பிரகிருதி அடங்கும்.**

*தொடர்பை அறுத்தால் ஆட்சி கலையும்.*

✡ சாட்சிபுருஷன்என்பது மனோமயபுருஷன். அது சாட்சியாகவே இருக்கும்.

அது சாட்சியாகவே இருந்தாலும், பிரகிருதி செயல்பட அதன் சக்தியையே பயன்படுத்துகிறது.

கணவன் மனைவிக்கு அடங்கியவன் என்றால், கணவனுக்குரிய அதிகாரத்தை மனைவி செலுத்துவாள். என்றாலும், அவள் பயன்படுத்துவது கணவனுடைய உரிமையே. எந்த நிமிஷமும் கணவன் விழித்துக்கொண்டால், மனைவி அடங்குவாள். அப்படி விழித்துக் கொள்ளும் புருஷனுக்கு ஈஸ்வரன்எனப் பெயர்.

**பிரம்மம், மாயை.**
**புருஷன், பிரகிருதி.**
**ஈஸ்வர, சக்தி என்பவை மூன்று நிலைகள்.**

புருஷன் சாட்சிபுருஷனாக இருக்கும்வரை பிரகிருதி அடங்காது.

புருஷன் உத்திரவு இட ஆரம்பித்தால் பிரகிருதி அடங்கும்.

உத்திரவு இடும் புருஷன் ஈஸ்வரனாக மாறும்.

அப்பொழுது பிரகிருதி சக்தியாகும்.

✡ மானேஜருக்கு முதலாளி அடங்கியுள்ள நிலையுண்டு.

தொண்டருக்கு தலைவர் அடங்கியுள்ள நிலையுண்டு.

✡ பிராணனில் ஆசையில்லை எனில் பிராணமயபுருஷனுக்கு விடுதலை உண்டு.

மனத்தில் அகந்தையில்லை எனில் மனோமயபுருஷனுக்கு விடுதலை உண்டு.

உடல் பழக்கத்திற்கு அடிமையாகவில்லைஎனில் அன்னமய புருஷனுக்கு விடுதலையுண்டு.

✡ ஆத்மாவுடையது ஞானம்.

பிரகிருதி பெற்றது அஞ்ஞானம்.

அஞ்ஞானத்தைப் பிரகிருதி இழந்தால், அது ஆத்மாவாகும்.

மனம், உயிர், உடலின் அஞ்ஞானம் அகந்தை, ஆசை, பழக்கமென இருக்கிறது.

**ஆத்மா அஞ்ஞானத்தை இழந்தால், வளரும்.**

**வளரும் ஆத்மாவுக்குச் சைத்தியபுருஷன் எனப் பெயர்.**

**சைத்தியபுருஷன் வெளிப்பட்டால் வாழ்வு அற்புதமாகும்.**

✡ சைத்தியபுருஷனுக்கு 3 பகுதிகள் உள்ளன.

மனத்தில் அவனுக்கு மனத்தின் சைத்தியபுருஷனெனவும்,

உயிரில் அவனுக்கு பிராணசைத்தியபுருனெனவும்,

உடலில் அவனுக்கு உடலின்சைத்தியபுருஷனெனவும் பெயர்.

❀ ❀ ❀

**931) மனம் சத்தியஜீவியத்தினின்று பிரிவதற்கு, அறியாமை எனும் பிரிவினைக்குரிய தீவிரம். அதை அடுத்த நிலையில் உறுதிப்படுத்துவது அகந்தை.**

***அகந்தையும், அறியாமையும் மனத்தை சத்தியஜீவியத்தினின்று பிரிக்கின்றன.***



✡ சத்தியஜீவியம்என்பது சிருஷ்டிகர்த்தா, கடவுள்.

அது இரண்டாகப் பிரிகிறது.

அவற்றிற்கு ஹிரண்ய கர்ப்பம், விராடபுருஷன் எனப் பெயர்.

ஹிரண்ய கர்ப்பம் காலத்தைக் கடந்தது, மேலேயுள்ளது.

விராடபுருஷன் கீழேயுள்ளது, காலத்தில் இருப்பது.

**இப்பிரிவினையால் மனம் உண்டாகிறது.**

**மனம் இவையிரண்டிற்கும் இடையில் உள்ளது.**

✡ சத்தியஜீவியத்திற்கு முழுப் பார்வையுண்டு.

பிரபஞ்சம் முழுவதும் அதன் ஒரே பார்வைக்குட்பட்டது.

மனத்திற்கு முழுப்பார்வையில்லை.

பார்வையிரண்டாகப் பிரிகிறது.

காலத்தில் உள்ள உலகைப் பார்க்கலாம்.

திரும்பி காலத்தைக் கடந்த கடவுளைப் பார்க்கலாம்.

காலத்தைக் காண்பவன் சம்சாரி.

கடவுளைப் பார்ப்பவன் சன்னியாசி.

மனிதன் இரண்டையும் மாறிமாறிப் பார்க்க முடியும் என்றாலும், ஒன்றைப் பார்ப்பவன் அடுத்ததைப் பார்க்க மறுக்கிறான்.

**பார்க்க மறுப்பது அஞ்ஞானம்.**

**அதுவே அஞ்ஞானம் பிறந்த இடம்.**

✡ பார்க்க மறுத்ததுடன் மனம் தன்னைத் தன் செயலில் மறப்பது அஞ்ஞானம் வளர உதவும்.

தன்செயலில் தன்னை மறந்த மனம் தன்னில் தன்னை இழக்கும். **இது அகந்தை**.

இது மேலும் அஞ்ஞானம் வளர உதவும்.

அடுத்த கட்டத்தில் மனம் தன்னைப் பிராணனில் இழக்கும்.

முடிவாக மனம் தன்னை உடலில் இழக்கும்.

✡ உடலில் இணைந்த மனம் அதனின்று பிரிந்தால்,
பிராணமயபுருஷன் வெளிப்படுவான்.
உயிரில் கலந்தவன் அதனின்று பிரிந்தால்,
மனோமயபுருஷன் வெளிப்படுவான்.
மனத்திலிருந்து மனிதன் பிரிந்தால்,
சத்தியஜீவியம் வெளிப்படும்.

✡ அஞ்ஞானம் உற்பத்தியான வரலாறு இது.
அதனின்று மீளும் வகையும் இதுவே.

✡ அஞ்ஞானமின்றி சிருஷ்டியிருக்க முடியும்.
ஆனால் இந்த சிருஷ்டிக்கு முடியாது.

தொடரும்.....

❀❀❀

**ஜீவிய மணி**

**ஆழத்தின் அஸ்திவாரம் அவசியமற்றதை நீக்கும்.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தனித்தன்மையைச் சிருஷ்டிப்பது இயற்கைக்கு முன்னேற்றம். தனித்தன்மை, பொதுத்தன்மையாவது, தனித்தன்மைக்கு முன்னேற்றம். அதற்குத் தனித்தன்மை, தன்னை இழந்து மற்றதுடன் கலக்க வேண்டும். இயற்கை, முரண்பாடுகளால் முன்னேறும் முறை இது.

***தனித்தன்மை தன்னையிழந்து பொதுதன்மையாகிறது.***



**"அன்னை இலக்கியம்"**

# தேடி வந்த தெய்வம்

இல. சுந்தரி

பகல் பொழுதெல்லாம் வேலை செய்வதிலும், வேலைக்காரர்களுக்கு வழிகாட்டுவதிலும் ஓடிவிடுகிறது. எல்லோரும் சென்றபின் அந்தி நேரம் வந்தால், தனிமை பூதாகரமாய்ப் பயமுறுத்துகிறது.

இளவயதில் கணவர் இறந்துவிட்டார். பதவியும், செல்வாக்குமாயிருந்த கணவரின் இழப்பு பேரிடியாய் இறங்கியது. பத்து வயதும், பன்னிரண்டு வயதுமான பெண்ணும், ஆணும் என இரண்டு குழந்தைகள்.

எப்படி வளர்ப்பதுஎன மலைத்து நின்றபோது இவள் கணவர் வேலை பார்த்த நிறுவனம் இவள் படிப்புக்கு ஏற்ப ஒரு வேலை கொடுத்துதவியது. பெரிய ஆபீஸராய் நிறுவனத்தையே ஆட்சி செய்த கணவர் சென்றபின், அதே இடத்தில் அதைவிடச் சாதாரணமான ஒரு வேலை. என்றாலும், நேர்மையும் திறமையும் கொண்ட கணவர் எல்லோரும் இவளை மரியாதையுடன் நடத்த வைத்திருப்பது பெரிய பாக்யமே.

கடினமாய் உழைத்து இரண்டு குழந்தைகளையும் பெரிய படிப்பு படிக்க வைத்து, அவர்கள் விருப்பம் போல் மணமுடித்து, கடமையை ஓரளவு நிறைவு செய்துவிட்டாள்.

பெண் வெளிநாட்டில் தன் கணவர் மற்றும் குழந்தைகளுடன் சிறப்பான வாழ்க்கை வாழ்கிறாள். தன்னை ஆளாக்கிய தாயின் மீது நன்றியும், பாசமும் கொண்டவள். வயதான காலத்தில் தாய் நிம்மதியாய் வாழ வேண்டும்என்று நிறைய பொருளுதவி செய்வாள். ஆண்டிற்கு ஒரு முறை தவறாது குழந்தைகள், கணவருடன் வந்து ஆதரவாய் இருந்துவிட்டுப் போவாள். மகளும், குழந்தைகளும் சென்றதும் வீடு வெறிச்சோடிவிடும்.

காரணம் இவள் மகன் திருமணத்திற்குப் பிறகு மனைவியுடன் தனியே சென்றவன் ஒரு முறைகூட இவளை வந்து பார்த்ததில்லை. அவன் இருக்குமிடம் தேடி அலைந்து, கண்டுபிடித்து, பாசத்தோடு பார்த்தபோதும் இவளுக்கு வரவேற்பில்லை.

காரணம் கற்பிக்கவும் முடியவில்லை. நல்ல பொருளாதார வசதியுடன் நன்கு வளர்க்கப்பட்ட பிள்ளை, நல்ல படிப்பு, திறமை யாவும் உண்டு. காதலித்த பெண்ணை மணக்கவும் தாய் தடை ஏதும் கூறவில்லை. அவளே நடத்தி வைத்தாள். அவர்களுக்கு மகப்பேறும் இல்லை. பிள்ளை தன்னிடம் இல்லையேஎன்ற குறை; பிள்ளைக்கு ஒரு குழந்தை பிறந்து அதைக் கொஞ்சி மகிழ வேண்டும் என்ற ஏக்கம், இதைத் தவிர எதுவும் குறையில்லை.

இந்நிலையில் சர்க்கரை வியாதி சிறிது சிறிதாக வளர்ந்து தொல்லை தர ஆரம்பித்துவிட்டது. அடிக்கடி ஏதேனும் கடும் மருத்துவம் மேற்கொள்ளும் நிலை. ஓ, இன்னும் இவள் யாரென்றே சொல்லவில்லையல்லவா? கதை இங்குதான் தொடங்குகிறது.

நம் கதாநாயகி 'சுசீலா ஆண்ட்டி' என்று அக்கம்பக்கத்தினரால் அழைக்கப்படுபவர். அறுபது வயதை நெருங்கிக்கொண்டிருப்பவர். இவரை ஞானி என்றோ, அஞ்ஞானி என்றோ கூறிவிட முடியாது. பாசம் வரும்போது அஞ்ஞானமும், மற்ற நேரங்களில் ஞானமுமான சராசரி மனுஷிதான். எல்லோரையும் போல் நல்ல, கெட்ட குணங்களின் கலவையால் ஆனவர்தாம். நல்ல குணம், அதாவது இரக்கசுபாவம், கடவுள்பக்தி, தாராளமனப்பான்மை, சுத்தம், ஒழுங்கைப்பேணுதல், யாவும் இருந்தும் குறைகூறும் சிறியசுபாவத்தால் குடம்பாலில் துளி விஷம்போல் யாவும் பரிமளிக்காமல் போய்விடுகிறது.

குறைகூறும்சுபாவம் யாவர்க்கும் உண்டு. என்றாலும் குறையை மறைத்து, பாராட்டிப் பேசும் நாகரீகம் இவளுக்கில்லை. இதன் காரணமாய் உறவினர் அதிகம் இவளை நெருங்குவதில்லை. மற்றவர் நிறைவை நேரே புகழும் அதே நேரம், அவர்களிடம் இவளுக்குப் பிடிக்காத குணமிருந்தால் அதை விவரித்துப் பேசுவாள். அது அவர்களுக்குச் செய்யும் நல்லதுஎனப் பெருமைபட்டுக்கொள்வாள். உண்மையில் அவர்கள் மனம் புண்படுவதை இவள் உணரமாட்டாள்.



இக்குணம் காரணமாய் இவளுக்கு உதவும் நண்பர்களும் இவள் குணத்தைப் பற்றித் தங்களுக்குள் வருத்தமாய்ப் பேசிக்கொள்வார்கள். இந்நிலையில் சர்க்கரைவியாதி காரணமாய் காலில் புண் ஏற்பட்டு, அறுவை சிகிச்சையினால் மிகவும் பலவீனப்பட்டாள். உடலும், மனமும் சோர்ந்தது.

தன் வயோதிகத்தில் தன் மகன் உடனிருந்து தனக்கு ஆதரவு அளிக்காத ஏக்கம் பெரிதானது. ஒருவேளை மருமகளை குறை கூறியிருந்தாலும், அதற்காக ஈன்றவளை முழுதும் ஒதுக்குவது எப்படி நியாயமாகும். எப்போதேனும் வந்து பார்த்துவிட்டாவது போகக் கூடாதா என்று ஏங்கினாள்.

சொல்லப்போனால், பிள்ளைகள் திருமணத்திற்குப்பின் இவள் குடும்பப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டாள். பிள்ளை இவளை வெறுத்தாலும் இவள் பிள்ளையை வெறுத்தொதுக்கவில்லை. மனவமைதியோடு குழந்தைகளை, கடவுள் பொறுப்பில் விட்டுவிட்டு ஆன்மீகம் மேற்கொள்ள ஆதரவான சூழல் இயல்பாகவே அமைந்தது.

மனிதசுபாவம் அதை ஏற்பதில்லை. கஷ்ட, நஷ்டங்கள் வந்து மனம் வெறுப்படைந்தாலும், அமைதியும், ஆனந்தமும் தரும் ஆன்மீகத்தை விரும்புவதில்லை. சுக, துக்கம் நிறைந்த வாழ்வை வாழ்வதே சிறப்புஎன்று பேசி மகிழும். இல்லறத்தைத் தூய துறவற நெறியோடு வாழ்ந்தால், துக்கத்தை சுயமாய்த் திருவுருமாற்றும் உபாயம் உண்டு என்பதும் மனிதசுபாவம் ஏற்காதவொன்று. சுசீலா ஆண்ட்டியும் அப்படித்தான். பந்தங்களிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக இறைவனை நினைக்க ஏற்பட்ட வாய்ப்புஎன்று இதைக் கொள்ள முடியவில்லை. வீட்டில் பூஜை, பஜனை என்று தான் உயர்வாக நம்புவனவற்றையெல்லாம் செய்தாள். தனக்குதவும் ஏழை, எளியவர்க்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தாள்.

இருந்தாலும் மகனின் ஆதரவு இல்லைஎன்னும் ஏக்கமே நெஞ்சில் வியாபித்து நின்றது. பெரிய உயர்ந்த பேச்சுக்களைப் பேசி முடித்து, இறுதியில் மகனைப் பற்றிய குறையில் பேச்சை முடிப்பாள்.

இந்நிலையில்தான் சமீபத்தில் அறுவைசிகிச்சை நடந்தது. மகளும் எப்படியோ வந்துவிட்டாள். கிடைத்த குறைந்த நாட்கள்

விடுமுறையைத் தாயுடன் இருந்து உதவி, சற்று தேற்றிவிட்டு, பண உதவியும் செய்துவிட்டுப் போனாள். அதற்குமேல் அவள் செய்வதற்கு இல்லை.

யார், யாரோ வந்துதவினர். இவருக்கு ஆறுதல் கூறிய பலரில் ஒருவர் அன்னையன்பர். அன்னையென்னும் அற்புத சக்தியைப் பற்றிக் கூறி, அது பற்றிய சில புத்தகங்களைப் படிக்கக் கொடுத்தார். தியான மையமும் செல்லவியலாத இவளை அன்னை தாமாகத் தேடி வந்தார்.

படிக்கப் படிக்க அதில் மனம் ஈடுபட்டு, தன்னைப் பற்றியே நினைக்கும் நினைவு மறந்தது. தனக்குதவ ஆற்றல்மிக்க சக்தி ஒன்று உள்ளதுஎன அதைப் பற்றிக்கொண்டாள். தன் மகன் இருந்து தனக்குச் செய்யக்கூடிய கடமைகளை வலிய வந்து யார், யாரோ செய்தனர். இவள் குணக்குறை கண்டு ஒதுங்குபவர்கூட வலிய வந்து உதவினர். ரிக்ஷாகாரர், பூக்காரர், காய்கறி விற்பவர், மளிகைக் கடைக்காரர் எல்லோருமே வலிய வந்து உதவினர்.

அன்னையின் திருவுருவப் படத்தை பிரதிஷ்டை செய்தவுடன் வீட்டின் சூழலும் சோகத்திலிருந்து அமைதிக்கு மாறியது. கிடைத்தற்கு அரிய பூக்கள் வலிய வந்து கிடைத்தன. வீட்டிற்குள் யார் நுழைந்தாலும் தெய்வீகம் கமழ்வதை உணர்ந்து அனுபவித்தனர்.

குறை கூறக்கூடாது; குறையை நிறைவாக மாற்ற வேண்டும்; குறையைப் புறக்கணித்து, மற்றவரிடம் உள்ள நிறைவை மட்டும் பாராட்டி, நாம் பிறரிடம் காணும் குறை நம்முள் உள்ள குறையின் பிரதிபலிப்பு என்பதை படித்தறிந்து, ஏற்க மறுக்கும் மனத்தோடு போராடி, ஏற்க முயன்று, வெற்றி கண்டாள்.

சதா 'அன்னை, அன்னை' என்று பக்தியுடன் அழைக்க ஆரம்பித்தாள். ''அன்னையுடன் பேசு. உனக்காக யாவும் அவரே செய்வார்'' என்று அன்பர் கூறிய ஆலோசனை இதமளித்தது.

தனிமையில் அன்னையின் திருவுருவப் படத்தின் முன்னமர்ந்து பேச ஆரம்பித்துவிட்டாள். பதிலுக்கு அன்னை அவளைப் பார்த்து புன்னகைப்பது புரிந்தது, இதமாயிருந்தது. ''அன்னையே! நீர் கட்புலனாகாத சூட்சும சக்தியாய் இருப்பின் எனக்கு உம்மை முழுதும் அனுபவிக்க இயலவில்லை. என் அறியாமையைப் பொறுத்துக்



கொண்டு, நீர் ஏன் ஒரு மானுட வடிவில் வந்து என்னுடன் தங்கக் கூடாது? தனிமையை நான் மறக்க வேண்டும். என்னுடன் நீர் என் மகனாக, என் மகளாக இருக்க வேண்டும்'' என்று வேண்டினாள்.

திடீரென ஒரு நாள் இவள் மகளைப் போன்ற பிராயமுடையவள் இவள் வீட்டு வாசலில் வந்து காரிலிருந்து இறங்குகிறாள். நல்ல தோற்றப்பொலிவு, அறிவுச்சுடர் வீசும் அழகிய கண்கள், நெடுநெடு என்று உயரம், வெளிநாட்டவர் போன்ற மேனிநிறம். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பூஞ்சிரிப்பு.

கார் வரும் ஒலி கேட்டு, ஒருவேளை மகன்தான் வந்து விட்டானோ என்ற ஆவலில் கால்வலியை மறந்து விரைவாகக் கதவைத் திறந்தாள்.

பரவசமூட்டும் அந்தப் பெண் படியேறி வருகிறாள்.

அன்னையே வந்துவிட்டாரோ என்கிறது உள்ளம். நிச்சயம் இந்தப் பெண்ணை இவளுக்கு இதற்கு முன் பார்த்த நினைவில்லை. ஒருவேளை அக்கம்பக்கத்தினர் (உயர் பதவியினர்) யார் வீட்டிற்கேனும் வந்து, தவறுதலாக இங்கு வந்துவிட்டாளோ? என்று தோன்றியது.

இருந்தாலும் படியேறி வந்தவர்களை வரவேற்பதுதானே மரியாதை. மேலும் இந்தப் பெண்ணைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. எனவே,

''வாருங்கள், நீங்கள் யாரென்று தெரியவில்லை'' என்று முன்பின் தெரியாத பெண்என்று மரியாதையாகப் பன்மையில் அழைத்தாள்.

ஆனால் அவளோ, ''சுசீலா ஆண்ட்டி நீங்கள்தானே?'' என்று நெருங்கிய உரிமையுடன் கேட்டாள்.

அவள் தன்னைத் தேடித்தான் வந்திருக்கிறாள் என்ற மகிழ்ச்சி ஒரு புறம்; யாரென்று தெரியாத குழப்பம் ஒரு புறம்.

''ஆமாம், ஆமாம், சுசீலாதான்'' என்றாள்.

''என்னைத் தெரியவில்லையா?'' என்றாள்.

இவளைப் பார்த்தால் மிகவும் வேண்டியவரைப் பார்ப்பது போல்

மகிழ்ச்சி உண்டாகிறது. ஆனால் யாரென்றும் தெரியவில்லை.

''தெரியவில்லை'' என்று மிகவும் தயக்கத்துடன் கூறினாள்.

''பரவாயில்லை, ஆண்ட்டி. நீங்கள் என்னைச் சின்னக் குழந்தையாய்ப் பார்த்தது'' என்றாள்.

இவள் சின்னக் குழந்தையாய் இருந்தபோது பார்த்தது எனக்கே நினைவில்லை என்றால், இவளுக்கு எப்படி என்னை நினைவிருக்கும் என்று உள்ளே ஒன்று ஓடியது.

''நீங்கள் கல்கத்தாவில் இருந்தபோது உங்கள் பக்கத்து வீட்டாரிடம் நீங்கள் நெருங்கிப் பழகியது நினைவில்லையா? மனோகரியின் மகள் சாதனாதான் நான்''.

மிகவும் யோசித்தாள். திருமணம்ஆன புதிதில் இவள் கணவருடன் வடநாட்டில் பல ஊர்களில் இருந்திருக்கிறார்கள். எங்குச் சென்றாலும் அக்கம்பக்கத்துக் குழந்தைகளை அழைத்து வந்து வைத்துக்கொள்வாள். அதிலும் பெண் குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். எங்குச் சென்றாலும் அழைத்துப் போவாள். விளையாட்டு பொருள், டிரஸ் எல்லாம் வாங்கித் தருவாள். அடுத்தவர் குழந்தை என்றே நினைக்காமல் சொந்தக் குழந்தை போல் பசியறிந்து உணவூட்டி, தாலாட்டித் தூங்க வைப்பாள். அக்கம்பக்கத்தவர் இவளிடம் குழந்தையை விட்டுவிட்டு நிம்மதியாக தம் வேலைகளைப் பார்ப்பதுண்டு. அந்த வகையில் இவளும் ஒரு குழந்தையாக இருக்கலாம். இப்போதெல்லாம் நினைவாற்றல் குறைந்துவிட்டது. எனவே, குறிப்பாகப் பெயர் நினைவில்லை.

''பெயர் நினைவுக்கு வரவில்லை. அதனாலென்ன? நீ நினைவுடன் வந்திருக்கிறாயே, அது போதும்'' என்றாள்.

''எனக்கும் உங்களைத் தெளிவாக அடையாளம் தெரியவில்லை. எனக்கு அப்போது 3 வயது இருக்குமாம். நீங்கள்தான் என்னை அன்புடன் தூக்கி வைத்து கொஞ்சுவீர்களாம். அழகழகாய் புது டிரஸ் வாங்கிப் போட்டு மகிழ்வீர்களாம். நான் அழும் சத்தம் கேட்டால் ஓடி வந்து அணைத்துக்கொள்வீர்களாம். என் பசி நேரம், தூங்கும் நேரம், யாவும் என் அம்மாவைவிட உங்களுக்குத்தான் நன்றாகத் தெரியுமாம். அம்மா அடிக்கடி சொல்வாள். உங்களைப் பார்க்க வேண்டும் என்று



ஒரே ஆவல். அந்த ஆவல் இவ்வளவு விரைவில் நிறைவுறும் என்று எதிர்பார்க்கவில்லை'' என்று அன்புடன் கூறிக்கொண்டிருந்தவள், சுசீலாவின் முகத்தில் காணும் திகைப்பைக் கண்டு, ''ஓ, உங்கள் வீட்டை எப்படிக் கண்டுபிடித்தேன் என்று பார்க்கிறீர்களா? அங்கிள் வேலை பார்த்த ஆபீஸில் அவர் உயர் பதவியில் இருந்தாராம். அதன் ஹெட்ஆபீஸ் சென்னை என்று சொல்லியிருக்கிறீர்களாம். அங்கிள் பெயரையும், பதவியையும் சொல்லி அவர் ஆபீஸில் போய் விசாரித்தேன், எல்லா விபரமும் கேட்டறிந்தேன்'' என்றாள்.

என்றோ சிறு வயதில் தான் கொஞ்சி மகிழ்ந்த குழந்தை நன்றியோடு தன்னைக் காண வந்தது அவளுக்கு மிகுந்த மகிழ்வு அளித்தது. இப்போதும் அவளுக்குப் பெயர் நினைவில்லை.

''இத்தனை நினைவு வைத்து வந்திருக்கிறாயே. என்னையும் ஒருவர் தேடி வருவாரா? வா, வா'' என்று அன்போடு கையைப் பற்றி அழைத்தாள்.

''நீ எங்கிருந்து வருகிறாய்? உன் பெற்றோர், கணவர், குழந்தை எல்லோரும் எங்கிருக்கிறார்கள்'' என்றாள்.

''இப்போதைக்கு நான் மட்டுமே வந்திருக்கிறேன். இவ்வூருக்கு மாற்றலாகி வந்திருக்கிறேன். பெரிய போஸ்ட். கார் இருக்கிறது. தங்க இடம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் சுசீலா ஆண்ட்டியின் அன்பு அதற்கெல்லாம் ஈடாகுமா?'' என்றாள்.

''பேசாமல் நீ என்னுடன் தங்கிவிடு. பெரிய பங்களா இல்லை என்றாலும், தேவைக்கு இங்கே எல்லா வசதிகளும் உண்டு. நானும் தனியாய் இருக்கிறேன்'' என்றாள்.

''நானும் உங்கள் அன்பிற்குக் கட்டுப்பட்டுத்தான் இங்கு வந்தேன். ஒருவகையில் நான் கடவுள் மாதிரி'' என்றாள் குறும்பாய்.

''மாதிரி என்ன, கடவுளேதான். என் மகளாய், மகனாய் வா என்று இறைவனை வேண்டினேன். உடனே வந்துவிட்டாய்'' என்றாள் சுசீலா.

''டிரைவர், சாமான்களை இறக்கி வைத்துவிடுங்கள். நீங்கள் போகலாம். காலை 10 மணிக்கு வந்தால் போதும்'' என்று காரை அனுப்பிவிட்டாள்.

சிறு வயதில் தன் மகள் பயன்படுத்திய அறையை அவள் வெளிநாடு சென்றதும் சுத்தம் செய்து பயன்படுத்தாது வைத்து இருந்தாள். அன்னையைப் பற்றி படித்துணர்ந்ததும் அந்த அறையை அன்னை அறையாக்கியிருந்தாள். அங்கு அன்னை, ஸ்ரீ அரவிந்தர் திருவுருவப்படம், மலர்த் தட்டுகள், ஊதுபத்தி மணம்.

அந்த அறையில் சாதனா தங்குவதற்கு ஏற்ப எல்லா வசதிகளும் இருந்தது. இதுவரை அந்த அறையை வேறு எதற்கும் பயன்படுத்த மாட்டாள். ஆனால் சாதனா அங்கு தங்குவதில் அவள் மனத்தில் தடையேதுமில்லை. அங்கு அன்னைக்கு என்று மெத்தென ஒரு படுக்கையும் வைத்திருந்தாள்.

''இந்த அறை உனக்குப் பிடித்திருக்கிறதா?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள் சுசீலா.

"ஏன் பிடிக்காமல்? நான்தான் உங்கள் கடவுள் என்று சொல்லி விட்டீர்கள். கடவுளுக்காக அமைத்த இடத்தில் என்னைத் தங்கச் சொல்கிறீர்கள். எனக்குப் பிடிக்காமல் போகுமா, என்ன?" என்றாள்.

வீடு திடீரென மௌனமான சப்தமாயிற்று. சூழல் கனத்தது.

**தொடரும்.....**

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**சமூகத்தை மனிதன் ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக**
**தனிமனிதனின் தனித்தன்மையை இனி சமூகம் ஏற்க வேண்டும்.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

## முழுமையின் சிறப்பு

Perfection என்பதைச் சிறப்பு எனலாம். நேரான தமிழ்ச் சொல் இல்லை. 99% பிரார்த்தனை பலிப்பது நம்பிக்கை. அருளால் பலிப்பது 100%. அன்னையின் அருளால் பலிக்கும்பொழுது 100%க்கு மேல் பலன் எழும்.

ஒரு கம்பனியில் பல அம்சங்கள் உண்டு. எதை உயர்த்தினாலும் அதற்குரிய பலன் உண்டு. எல்லா அம்சங்களையும் உயர்த்தினால் கம்பனியின் நிலை உயரும். சில்லரை வியாபாரம் மொத்த வியாபாரமாகும். இந்த ஆண்டு ஆபீசில் லீவு எடுக்காமல் இருக்கப் போகிறேன் என்று முடிவு செய்தால், லீவு குறைவாக எடுக்கலாம்; எடுக்காமலேயிருப்பது கடினம். அப்படிப்பட்ட ஸ்தாபனங்களும் உண்டு.

**Perfection சிறப்பு வந்தால் மனித நிலை தெய்வ நிலையாகும்.**

**வேலை எதுவானாலும் சிறப்பு சிரமம்.**

அன்னையைத் தரிசிக்க என் வாழ்நாளில் நான் ஒரு முறையும் தவறியதில்லை என்ற அன்பருக்கு அன்னை சித்திக்கும் நிலை எழும். ஹர்த்தால், இன்ஸ்பெக்ஷன், நோய் போன்ற எதுவும் அவருக்குத் தடையாக இல்லை என்பது பிற்காலச் சித்தியை சுட்டிக் காட்டும்.

வின்ஸ்டன் சர்ச்சில் மூதாதையர் ஒருவர் ஆட்டு மந்தை வைத்திருந்தார். அது ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டது. இரண்டு லட்சமாக்க முயன்றார். பல முறை 199,999 வரை வந்தது. இரண்டு இலட்சத்தை ஒருபொழுதும் அது தொடவில்லை என்று ஒரு செய்தி Perfectionனுடைய முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

ஒரு பிழையின்றி டைப் செய்வது, அச்சடிப்பது, ஒரு நாள் தவறாமல் பதில் எழுதுவது, ஒருவர் தவறாமல் நல்ல பெயர் எடுப்பது, போன்றவை பலித்தால், அவர் அடுத்த கட்டத்திற்குப் போகமாட்டார்; முடிவான கட்டத்தை எட்டுவார்.

**சிறப்பு உயர்வை எட்டும் என்பதே அதன் சிறப்பு.**

❀ ❀ ❀

## சார்லி சாப்ளின்

அமெரிக்க ஜனாதிபதி உலகை ஆள்பவர். அந்த ஸ்தானத்திற்கு ஒரு நகைச்சுவை நடிகர் வந்தார். இரண்டு பீரியடிருந்தார். சட்டம் தடையில்லாவிட்டால், ஆயுள் முழுவதும் அவரே ஜனாதிபதியாக இருந்திருப்பார். சார்லி சாப்ளின் அவருக்கு முன்னோடி. முதன் முறையாக உலகப் பிரசித்தி பெற்ற நடிகர் அவர்.

பொதுமக்கள் ஒரு கொள்கையை ஏற்றுக்கொண்டால், அதன் ஸ்தாபகரையும் மிஞ்சுவார்கள்.

- ✡ தீவிர கம்யூனிஸ்ட்டுகளை எதிரிகள், ‘‘நீங்கள் காரல் மார்க்ஸையும் மிஞ்சுகிறீர்கள்’’ என்பார்கள்.
- ✡ தீவிர கிருஸ்துவர்களை, “ஏசுவே வந்து சொன்னாலும் நீங்கள் ஏற்கமாட்டீர்கள்” என்பர்.
- ✡ நக்கீரர் சிவபெருமானையே ஏற்கவில்லை என்பது இலக்கிய வரலாறு.

சார்லி சாப்ளின் பிரபலமாக இருந்த நாட்களில் அவருடைய ரசிகர்கள் ஆங்காங்கு சங்கங்கள் அமைத்து, பல வகைகளிலும் அவர் பெருமையைக் கொண்டாடினர். ஓரிடத்தில் சாப்ளின் போன்ற தோற்றமுடையவர்களைச் சேர்த்து பந்தயம் நடத்தினர். ஒருவரை முதல்வராகத் தேர்ந்து பரிசு அளித்தனர்.

நான்காம் இடத்தில் வந்தவர், “நான் எப்படி ஏமாந்தேன்?” என வினா எழுப்பினார். அவர் உண்மையில் சார்லி சாப்ளினாகும். எவரும் அறியாமல் போட்டியில் கலந்து **தோற்றார்**.

**மூட நம்பிக்கைகள் ஏராளம். அதில் இது ஒன்று. மகாத்மா காந்தியின் சீடரான மார்டின் லூதர் கிங்கிற்கு நோபல் பரிசு அளித்தவர், மகாத்மாவை மறந்தனர்.**

❀ ❀ ❀

October 2008 Jiviyam 14 Malar 6
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/06-08
Price: Rs.5/- WPP No.45/06-08


புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம்** (பாகம் 2) ரூ.250/-

**உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** ரூ.100/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு, புதுச்சேரி
- 605 011.
✆: (0413) 2212443, 2214231

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை-600 035.
✆: (044)-24347191